People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

31.1.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
சென்னை 600 009

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.1.2011 முதல் 31.1.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**1-1-2011 முதல் 31-1-2011 முடிய இம்மாதத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 4 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 135 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 33 |
| 5. | வகுப்பறை வன்முறை | 13 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 19 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 16 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 6 |
| 9. | கொத்தடிமை | 3 |
| 10. | பெண் சிசு கொலை | 5 |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 732 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 7 |

| | | |
|---|---|---|
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 12 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 3 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 12 |
| 17. | மணல் கொள்ளை | 10 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | 1 |
| 20. | பொதுவானவை | 25 |
| | மொத்தம் | 326 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-1
# 1. 1.2011 முதல் 31. 1.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 01.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதி பகுதியில் தமிழக மக்கள் முன்னேற்ற கழகத் தலைவர் ஜான்பாண்டியன் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். மண்டலமாணிக்கம் பகுதியில் இருதரப்பினருக்கும் மோதல் நடந்துள்ளது. காவலர்கள் தடியடி நடத்தி சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2. | 01.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, சிட்லாம்பாக்கம் எம்.எம்.டி.ஏ., காலனியைச் சேர்ந்த ரமேஷ் மனைவி கலாவதி(32) சுங்கத்துறை உதவி கமிஷனர் அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார். கலாவதி தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது அவரிடம் வாலிபர் சில்மிஷம் செய்தார். தட்டிக்கேட்ட கலாவதியை வாலிபர் அரிவாளால் வெட்டிவிட்டுத் தப்பியோட்டம். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 3. | 01.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** வால்பாறை பகுதியைச் சேர்ந்த தேனய்யா(40)வின் 19 வயது மகள். தேனய்யா தனது மகளை பாலியல் பலாத்காரம் செய்ததில் பெண் குழந்தை பிறந்தது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 4. | 01.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் முடங்கியார் ஆற்றில், வனக்காப்பாளர் ரவீந்திரன் தலைமையில் வனகாவலர்கள் கிட்டுதுரை, ராஜாமணி, சண்முகராஜ், பொன்னி உட்பட 7 ரோந்து சென்றனர். அப்பகுதியைச் சேர்ந்த தலைமலை என்பவர் அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்றார். டிராக்டரை தடுத்த | மணல் கொள்ளை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரிகள் மீது டிராக்டரை ஏற்றிக் கொலை செய்ய முயற்சி. | | |
| 5. | 01.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** காவேரிப்பட்டிணம் கரடி அள்ளி ஊராட்சியில் உள்ள சுருளிஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த தலித் மாணவன் இளவரசன்(18). பேருந்தில் வந்த அண்ணாமலை இளவரசனை தாக்கியதில் காயம். இளவரசன் மருத்துவமனையில் சிகிச்சை. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 6. | 01.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** மத்திய இணை அமைச்சர் நெப்போலியனிடம் சிறு தொழில் துவங்க மாற்றுத் திறனாளிகள் 170 பேர் மனு. வங்கியில் 50 சதவீதம் மானியத்திற்கு ரு. 15 ஆயிரம் வழங்க இணை அமைச்சர் பரிந்துரை. சாத்தூரைச் சேர்ந்த கைலாசம் பாரத ஸ்டேட் வங்கியில் தொழில் தொடங்க மனு கொடுத்தும் 5 மாதம் ஆகியும் அலைக்கழிக்கப்படுவதாக கைலாசம் வங்கி மீது புகார். | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 7. | 01.1.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி தேவதானம் காவேரி ரோடு தாயுமானவர் குடியிருப்பைச் சேர்ந்த பாண்டியன்(35) மனைவி நித்யஸ்ரீ. திருமணமாகி 6 மாதங்களே ஆன நிலையில் நித்யஸ்ரீ தூக்குப்போட்டுத் தற்கொலை. ஆர்டிஓ விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 8. | 01.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பேரையூர் அருகே உள்ள சந்தையூர் கிராமத்தைச் சேர்ந்த தங்கராஜ் மகள் வீரலட்சுமி(17). அதே பகுதியைச் சேர்ந்த தங்ககுமார் வீரலட்சுமியை கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 9. | 01.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே அய்யம்பட்டி லட்சுமியாபுரத்தைச் சேர்ந்த ராமலிங்கம் மகன் கஜேந்திரன்(14) கிடங்கின் அருகில் கழிவு பட்டாசுகளை எடுத்ததில் ஒன்றோடு, ஒன்று உரசிய பட்டாசு வெடித்ததில் கஜேந்திரனுக்கு | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பலத்த தீக்காயம். பட்டாசு உரிமையாள் அய்யப்பன்(33) வள்ளிராஜன் மீது வழக்குப் பதிவு. | | |
| 10. | 01.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருவாடானை தாலுகா வெள்ளைபுரம் அருகே சிறுகம்மையூர் பாம்பாற்று பகுதியில் மணல் குவாரி உள்ளது. குவாரியில் இருந்து வாகனங்களில் மணல் அள்ளிச் செல்வதால் சாலைகள் சேதமடைவதாக வாகனங்களை சிறை பிடித்து மக்கள் போராட்டம். | மணல் கொள்ளை | தினத்தந்தி |
| 11. | 01.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை பீளமேடு பகுதியைச் சேர்ந்த மாணவர் அவினாசி ரோட்டில் உள்ள ஒரு கல்லூரியில் எம்.சி.ஏ.2–ம் ஆண்டு படித்து வந்தார். மாணவியை செந்தில்(30) அன்பழகன்(30) சுரேஷ்(28) மாணவியை வேனில் கடத்த முயன்றபோது பொதுமக்களால் பிடிக்கப்பட்டு காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 12. | 01.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி என்.ஜி.ஓ. காலனி நியூ அருணா நகரைச் சேர்ந்த ஜெசிந்தாமேரி(38). கணவர் வெளிநாட்டில் வேலை செய்கிறார். வீட்டில் தனியாக இருந்த ஜெசிந்தாமேரியின் வாயில் துணியை திணித்த மர்ம நபர்கள் 10 பவுன் நகைகளை கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 13. | 01.1.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி கோட்டை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சிவராமன். காவல் நிலையத்திற்கு உட்படாத காந்திமார்க்கெட் பகுதியில் திருட்டு சிடி விற்பதாக 2 கடைகளில் சோதனை. மாநகர கமிஷனர் கரன்சின்ஹா நடத்திய விசாரணையில் அத்துமீறி செயல்பட்டதாக இன்ஸ்பெக்டர் சிவராமன் சஸ்பெண்ட். | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | 02.1.2011 | **அரியலூர் மாவட்டம்:** ஜெயங்கொண்டம் அருகே கூத்தூர் குருமனூரைச் சேர்ந்த சந்திரன் மகன் இளந்தெரியன்(24) மார்ட்டின்(20) சண்முகம்(25) சக்திவேல்(21) அருண்(24) கூவத்தூர் ஏரிக்கரையில் அமர்ந்து மது அருந்தினர். ரோந்து வந்த துரத்தியதில் காவலர்களுக்கு பயந்து ஏரிக்கரையில் குதித்த இளந்தெரியன் மரணம். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 15. | 02.1.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சியை சேர்ந்த ரவிச்சந்திரன் சுபாஷினி(26) இருவரும் காதலித்து திருமணம் செய்தனர். கணவருக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு இருப்பதை சுபாஷினி கண்டித்ததால் ஆத்திரமடைந்த ரவிச்சந்திரன் சுபாஷினியை தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 16. | 02.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை கோடம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த நிர்மலா தன்னுடைய குழந்தை திடீரென இறந்துவிட்டதால் அடக்கம் செய்ய பணம் இல்லாததால் குப்பைத் தொட்டியில் குழந்தையை வீசியதாக கைது. | வறுமை & குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 17. | 02.1.2011 | **சென்னை மாவட்டம்:** வில்லிவாக்கம் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த சுரேஷ்குமார் மனைவி சவுமியா(21). கூடுதல் வரதட்சணை கேட்டு சுரேஷ்குமார் குடித்துவிட்டு வந்து துன்புறுத்தியதால் மனமுடைந்த சவுமியா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 18. | 02.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பெத்தானியபுரத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் மகள் பிரியதர்ஷினி(11) வீட்டில் சிம்னி விளக்கு தவறி கீழே விழுந்ததில் பிரியதர்ஷனி உடல் கருகி மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 19. | 03.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கொட்டாம்பட்டி ஒன்றியம் குன்னாரம்பட்டி மந்தை அருகேயுள்ள தண்ணீர் டேங்க் | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இடிந்து விழும் தருவாயில் உள்ள தண்ணீர் டேங்க் அருகில் அங்கன்வாடி உள்ளது. இங்கு 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் படிப்பதாகவும் குடிநீர்தொட்டியை பழுதுபார்த்து தரும்படி பொதுமக்கள் புகார். | | |
| 20. | 03.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாநகராட்சி 67 வது வார்டு கோபாலிபுரம் விரிவாக்கப்பகுதி மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி 15 ஆண்டுகளாக அவதியுறுகின்றனர். | அடிப்படை வசதியின்மை | தினமலர் |
| 21. | 03.1.2011 | **மதுரை மாவட்டம்:** விக்கிரமங்கலம் வையத்தான் விலக்கு பகுதியில் உள்ள வைகை ஆற்றில் அனுமதியின்றி மணல் திருடிய இரண்டு மாட்டுவண்டியை துணைதாசில்தார் பாபு பறிமுதல் செய்தார். மாட்டுவண்டியை ஒட்டி வந்த பால்பாண்டி, கண்ணன் துணை தாசில்தாருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக தாசில்தார் புகார். | மணல் கொள்ளை | தினமலர் |
| 22. | 03.1.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் தந்தை பெரியார் நகரைச் சேர்ந்த கண்ணன் மகள் சுப்புலெட்சுமி(16). 10 வகுப்பு படிக்கும் சுப்புலெட்சிமியிடம் அதே பள்ளியைச் சேர்ந்த விஜய் என்ற ஊதல் விஜய்(19), கவுதம்(19), முத்துச்செல்வம்(16), பிரபாகரன்(17), 4 பேரும் விஜய்யை திருமணம் செய்துக் கொள்ளவேண்டும் என கத்திமுனையில் மிரட்டியதாக சுப்புலெட்சுமி புகார். விஜய் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 23. | 03.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சடைச்சிபட்டியைச் சேர்ந்த வெங்கடேஷ் மனைவி ரத்தினம்(42). அதே பகுதியைச் சேர்ந்த குபேந்திரன் அண்ணன் தோட்டத்தில் கணவன் மனைவி இருவரும் வேலை செய்தனர். குபேந்திரனுக்கும் வெங்கடேசுக்கும் ஏற்பட்ட வாய்த்தகராறில் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆத்திமடைந்த வெங்கடேஷ் ரத்தினத்தை தாக்கியதாக ரத்தினம் புகார். | | |
| 24. | 03.1.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி அருகே கச்சைகட்டியைச் சேர்ந்த தொத்தன் மகள் ராஜலட்சுமி(4). கச்சைகட்டி அருகே வீரணன் மாட்டுகொட்டகையில் கழுத்து அறுபட்ட நிலையில் கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை<br>&<br>கொலை | தினகரன் |
| 25. | 03.1.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை உடையாளிப்பட்டி அருகே தெம்பட்டாம்பட்டியைச் சேர்ந்த சுப்பிரமணி மகள் ராதிகா(19). அதே பகுதியைச் சேர்ந்த கணேசன்(25) ராதிகாவை பெண் கேட்டுள்ளார். ராதிகாவின் தந்தை சுப்பிரமணி பெண் தர மறுத்ததால் ஆத்திரமடைந்த கணேசன் மின்சாரத்தைப் பாய்ச்சி சுப்பிரமணியத்தை கொலை செய்ததாக புகார். | கொலை | தினகரன் |
| 26. | 03.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** சின்னாளபட்டியிலிருந்து திண்டுக்கல் பைபாஸ் செல்லும் சாலையில் குருவம்மாள் தோட்டம் பின்புறம் 35 வயது மதிக்கத்தக்க இளம் பெண் முகம் சிதைத்த நிலையில் பிணமாக கிடந்தாக பொது மக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கொலை | தமிழ்சுடர் |
| 27. | 03.1.2011 | **ஈரோடு மாவட்டம்:** கருங்கல்பாளையம் கே.ஏ.எஸ். நகரைச் சேர்ந்த சொர்ணலதா(32)க்கு தனது வீட்டை கோபு(32)க்கு ரூ. 53 லட்சத்திற்கு விற்பனை செய்தார். ரூ. 15 லட்சம் வாங்கிய நிலையில் விடுதலை சிறுத்தை கட்சியைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் விநாயகமூர்த்தி தலைமையில் 20 பேர் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டை கட்சி அலுவலகமாக மாற்றியதாக அவர்கள் மீது சொர்ணலதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 28. | 03.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை அருகே உள்ள பூலாங்குடி கிராமத்தைச் சேர்ந்த | பெண்கள் மீதான பாலியல் வன்முறை<br>& | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ராஜா, மகள் வளனரசி(16). அதே பகுதியைச் சேர்ந்த மரியநாதன்(19) ஜெகனிவாசகன்(20) இருவரும் காட்டில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த வளனரசியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை. | கொலை | |
| 29. | 03.1.2011 | **கடலூர் மாவட்டம்:** சிதம்பரம் வேங்கான் தெருவில் உள்ள காமராஜ் மெட்ரிக் பள்ளியில் அரசு விதித்த கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாக 300க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் புகார். கூடுதல் கட்டணம் கட்டாத மாணவர்களை ஆசிரியர்கள் அடித்ததாகவும் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர்கள் புகார். | வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 30. | 04.1.2011 | **மதுரை மாவட்டம்:** கருமாத்தூரில் ரீலைப் டிரஸ்ட் நடத்தி வருபவர் பாண்டியன் பார்வையற்றவர். உசிலம்பட்டியில் இயங்கி வரும் ஒரு டிரஸ்ட் குறைந்தவட்டியில் பணம் தருவதாக கூறி ஒன்பது லட்சம் ருபாய் மோசடி செய்ததாகவும் அந்த டிரஸ்ட் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாண்டியன் கலெக்டர் அலுவலகத்தில் புகார். | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 31. | 04.1.2011 | **தேனி மாவட்டம்:** வருஷநாடு அருகே அரண்மனைப்புதூரைச் சேர்ந்த ஆறுமுகம் மனைவி தாயம்மாள்(65). மூன்று மகன்கள், முன்று மகள்கள் உள்ள நிலையில் முதியவர்களை யாரும் கவனிக்கவில்லை இதனால் மனமுடைந்த முதியவர்கள் விஷம் குடித்துத் தற்கொலை. | முதியவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 32. | 04.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஜவஹர்புரத்தில் வசிக்கும் சஸ்பெண்ட் செய்யப்பட்ட காவலர் சதீஸ்குமார்(30). சொத்துத் தகராறில் சதீஸ்குமார் தனது பெரியம்மாவின் மகள் கவிதாவை அரிவாளால் வெட்டிக் கொலை. சதீஸ்குமார் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 33. | 04.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** | பெண்கள் மீதான | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ராமநாதபுரம் முதுகுளத்தூர் அருகே மணிபுரத்தல் ரெய்டு சென்ற காவலர்கள் இரவு நேரங்களில் முதியோர்களையும், கர்ப்பிணிகளையும் தாக்கி, வீடுகளை சேதப்படுத்தியதாக காவலர்கள் மீது பாதிக்கப்பட்ட மக்கள் புகார். | வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | |
| 34. | 04.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் அருகே தம்மநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சுடலைமணி(31) மனைவி பொன்செல்வி(27) குழந்தைகள் பூஜா(3), சண்முகராஜ்(11/2). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த பொன்செல்வி குழந்தைகளை கிணற்றில் வீசி தானும் குதித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 35. | 04.1.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் குடியாத்தம், சேம்பாக்கம், சத்துவாச்சாரி உள்ளிட்ட பகுதியில் கந்துவட்டி, மீட்டர் வட்டி, என்று தனியார் நிறுவனங்களிடம் கடன் வாங்கித் திருப்பிச் செலுத்தமுடியாத நிலையில் நிதிநிறுவனங்களின் மிரட்டலுக்கு பயந்து அங்குள்ள 10 பெண்கள் தற்கொலை. | கந்துவட்டிக் கொடுமை | தீக்கதிர் |
| 36. | 05.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, அயனாவரம் அடுத்த ஒட்டேரியைச் சேர்ந்த மாரி மனைவி உமா(26) பியூட்டி பார்லர் நடத்தி வந்தார். உமாவுக்கம் கார் டிரைவர் மணி(23)க்கும் கள்ளத்தொடர்பு. இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் உமா கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 37. | 05.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை இடையர்பாளையத்தைச் சேர்ந்த சவுந்தர்ராஜன் மனைவி வனஜா(34) இவர் மகளிர் சுய உதவிக் குழுவில் கடன் வாங்கி இருந்தார். கடனை இவரால் திருப்பி செலுத்தமுடியாததால் வனஜா விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை & கந்துவட்டிக் கொடுமை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 38. | 05.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை நாங்குநேரி கழுவூரைச் சேர்ந்த மந்திரம்(36) மகள் சுகன்யா(8). கடைக்குச் சென்ற சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் நயினார் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக மந்திரம் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 39. | 05.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை சுரண்டை அருகே உள்ள சாம்பவர் வடகரை அடுத்துள்ள ஊர்மேலழகியான் காந்தி வீதியைச் சேர்ந்த நல்லமுத்து மகள் நந்தினி(21) தனியார் கல்லூரியில் இன்ஜினியரிங் படித்து வந்தார். பெற்றோர் கண்டித்ததால் மனமுடைந்த நந்தினி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 40. | 05.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் அருகே உள்ள ஏழாயிரம் பண்ணை ஆர்.ஜ. ஆறுமுகம். கொல்லப்பட்டி பகுதி வைப்பாற்றில் அனுமதியின்றி மணல் ஏற்றி லாரியை ஆறுமுகம் பறிமுதல் செய்தார். லாரி டிரைவர் லாரியை ஏற்றிக் கொலை செய்ய முயன்றதாக ஆறுமுகம் புகார். | மணல் கொள்ளை & கொலைமுயற்சி | தமிழ்சுடர் |
| 41. | 05.1.2011 | **கரூர் மாவட்டம்:** கரூர் கிருஷ்ணராயபுரம் வட்டம் சிவாயம் ஊராட்சியில் உள்ள குருவிக்காரன்பட்டி மற்றும் நொச்சிப்பட்டி கிராமங்களில் மூன்று ஆண்டுகளாக பால்வாடி பள்ளிகள் மரத்தடியிலேயே செயல்பட்டு வருகிறது. 30க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியையும் உள்ளார். மழைக்காலங்களில் இந்த மையங்கள் செயல்படாது. கட்டிடம் கட்டித்தர வேண்டும் என பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு புகார். | வகுப்பறை வன்முறை | ஜனசக்தி |
| 42. | 05.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை திருப்பரங்குன்றம் குட்டையார் பிள்ளை தெருவைச் சேர்ந்த பாண்டித்துரை மனைவி லதா(30). | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணவன் மனைவி குடும்பத் தகராறில் முனமுடைந்த லதா விஷம் குடித்துத் தற்கொலை. | | |
| 43. | 05.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சவுராஷ்டிராபுரம் செம்மண் சாலை பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகள் ஷகீலா(21) உடல் நலக்குறைவால் அவதிப்பட்ட ஷகீலா தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை & வறுமை | தினகரன் |
| 44. | 05.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பிபிகுளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகள் சுகிதா(22). உறவினர் வீட்டில் தங்கி திண்டுக்கல்லில் உள்ள தனியார் இன்ஜினியரிங் கல்லூரில் படித்து வந்தார். கல்லூரி சென்ற சுகிதாவை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 45. | 05.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை நரசிங்கம் தேத்தாங் கிராமத்தைச் சேர்ந்த தலித் மக்கள் தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு தோட்டி மானியமாக வழங்கப்பட்ட 2 ஏக்கர் 3 சென்ட் இடத்தை வேறொரு நபருக்கு பட்டா மாறுதல் செய்துள்ளதாகவும் வேறு நபருக்கு வழங்கிய பட்டாவை ரத்து செய்யக்கோரி பலமுறை முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு புகார் செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 46. | 06.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலூர் அருகே கீழவளவு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பாப்பாக்குடிபட்டியைச் சேர்ந்த கதிர்வேல்(45) மனைவி பரமேசுவரி(35) மற்றும் குழந்தைகள் காயத்ரி(12) கல்பனா(2). கணவன் மனைவி குடும்பத் தகராறில் முனமுடைந்த பரமேசுவரி தனது இரு குழந்தைகளுடன் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 47. | 06.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஜெய்ஹிந்தபுரம் ராமையாதெரு | மாணவிகள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகுதியில் ஒரு தனியார் பள்ளியில் 7–ம் வகுப்பு படிக்கும் மாணவிகள் மதிய உணவு இடைவேளையில்போது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த 4 மாணவிகளை ஆட்டோவில் கடத்தியதாக புகார். காவலர்கள் கே.புதூர் பகுதியில் அந்த 4 மாணவிகளை மீட்டனர். | & கடத்தல் | |
| 48. | 06.1.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** நாசரேத்தைச் சேர்ந்த தனபால்(55) மகள் வசந்தி பெங்களூரில் தனியார் நர்ஸிங் கல்லூரியில் பி.எஸ்.ஸி படித்து வருகிறார். கல்விக்கடன்கோரி வசந்தி நாசரேத் கனரா வங்கியில் விண்ணப்பித்தார். கல்விக்கடன் வரைவோலையை வழங்குவதற்கு வங்கியின் ஊழியர் நாராயணன் மற்றும் மேலாளர் சாமுவேல் ஜெபராஜ் ரூ.12 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக தனபால் புகார். வங்கி ஊழியர் மற்றும் மேலாளர் இருவர் கைது. | லஞ்சம் | தினமணி |
| 49. | 06.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை புதூர் அருகே உள்ள மூன்றுமாவடி விவேகானந்தர் நகரைச் சேர்ந்த பால்பாண்டி மகள் மாலதி(29) கல்லூரி விரிவுரையாளர். அதே கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கும் செந்தில்குமாருக்கும் மாலதிக்கும் திருமணம் நடந்தது. கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் அவரது குடும்பத்தார் துன்புறுத்தியதாக மாலதி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினமணி |
| 50. | 06.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே உள்ள இளமனூரைச் சேர்ந்த கருப்பையா மகள். தேனி பகுதியைச் சேர்ந்த ஷேக் தாவூது(30) தன்னைக் கடத்திச் சென்று குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், திருமணம் செய்ய மறுப்பதாகவும் தாவூதை கைது செய்ய வேண்டும் என கருப்பாயூரணி காவல் | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையத்தில் புகார். | | |
| 51. | 06.1.2011 | **நெல்லை மாவட்டம்:** தாமிரபரணியில் தடையை மீறி மணல் அள்ளிய ஆறு மாட்டு வண்டிகள் பறிமுதல். | மணல் கொள்ளை | ஜனசக்தி |
| 52. | 06.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் ஆர்.ஆர்.பகுதிக்குழு உறுப்பினராக இருப்பவர் பாலமுருகன் ஆவின் பால் நடத்தி வருகிறார். அதே பகுதி ஊராட்சித் தலைவர் அனந்தராமன் ஆவின் பாலகத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்றி நோக்கத்தோடு இடையூறுகளை செய்து அடியாட்கள் மூலம் கடையை அடித்து நொறுக்கினார். இது குறித்து புகார் கொடுத்தும் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காததோடு பாதிக்கப்பட்ட பாலமுருகன் மற்றும் சிலர் மீது பொய் வழக்குப் பதிவு. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 53. | 06.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புத்தூர் நகரில் அமைக்கப்பட்டிருந்த நவீன பூங்காவை துணை முதல்வர் மு.க.ஸ்டாவின் புதன்று திறந்து வைத்தார். முன்னதாகப் பூங்காவிற்று வரும் மு.க.ஸ்டாலினை வரவேற்க மாணவ, மாணவியர் வெயிலில் கால்கடுக்க குடிக்கத் தண்ணீர் இன்றி ஒரே இடத்தில் 4 மணி நேரம் நிற்க வைக்கப்பட்டுச் சித்திரவதை. | வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 54. | 06.1.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தைச் சேர்ந்த முருகேசன் மகள் கார்த்திகா(20) இவர் விருதுநகரிலுள்ள ஒரு தனியார் கல்லூரியில் பிஇ3–ம் ஆண்டு படித்து வந்தார். விடுமுறை முடிந்து கல்லூரிக்கு செல்வதாக சென்ற காாத்திகாவை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 55. | 06.1.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மண்ணச்சநல்லூரைச் சேர்ந்த பிரபல ரவுடியான | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முருகேசன்(45)னின் 5–வது மனைவி சங்காதேவி(26). சங்காதேவியை முருகேசன் தினசரி அடித்துச் சித்திரவதை செய்ததாக காவல்நிலையத்தில் புகார். | | |
| 56. | 06.1.2011 | **நாகை மாவட்டம்:** நாகை மயிலாடுதுறை குத்தாலம் சத்யா நகரைச் சேர்ந்த மணிகண்டன்(24). புதிய ரேசன் கார்டு கேட்டு குத்தாலம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் விண்ணப்பம். ரேசன் கார்டு வழங்க ஆர்ஐ ரவி(47) ரூ.1000 லஞ்சம் கேட்டதாக மணிகண்டன் புகார். லஞ்சம் வாங்கும் போது ஆர்ஐ கைது. | லஞ்சம் | தினகரன் |
| 57. | 06.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சீரநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த சக்திவேல் மகன் சதீஷ்குமார்(19) பணி முடிந்து 31ம் தேதி இரவு வீடு திரும்பும்போது பாப்பநாயக்கன்புதூர் பேருந்து நிறுத்தத்தில் சில வாலிபர்கள் கேக்கை வழியில் செல்பவர்கள் மீது வீசினார். தட்டிக்கேட்ட சதீஸை அடித்தனர். அடித்தவர்களிடம் நியாயம் கேட்க சென்ற சதீஸ்குமாரை வாலிபர்கள் கடத்திச் சென்று வாயில் சயனைடு ஊற்றி கொலை. கார்த்திகேயன்(22) இளம்பரிதி(29) செந்தில்குார்(25) ஹக்கீம்(26) கணேசமூர்த்தி(25) விக்னேஸ்வரன்(22) கைது. | கொலை | தினகரன் |
| 58. | 06.1.2011 | **நெல்லை மாவட்டம்:** களக்காடு அருகே மூங்கிலடி அஞ்சுகிராமத்தைச் சேர்ந்த ராஜன்(21) டேவிட்(22) இருவரும் மணல் கடத்தும்போது கைது. மணல் கடத்துவதற்கு பயன்படுத்திய டிராக்டர், பைக் பறிமுதல். | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |
| 59. | 06.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை தெற்குவாசல் குப்புபிள்ளை தெருவைச் சேர்ந்த பக்கீர்முகமது மகள் நிஷாராபானு(25)க்கும் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சின்னராஜாமுகமது(28)க்கும் திருமணம் நடந்தது. கணவர் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறத்தியதால் மனமுடைந்த நிஷாராபானு தற்கொலை. | | |
| 60. | 07.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலூரை அடுத்த சென்னக்கரம்பட்டியைச் சேர்ந்த திவாகர் மனைவி மச்சகந்தி. கணவர் குடும்பத்தார் சொத்துக்காக மச்சகந்தியை விட்டு துரதத்திடிப்பு. தனது கணவருடன் சேர்ந்து வாழ நடவடிக்கை எடுக்குமாறு மச்சகந்தி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 61. | 07.1.2011 | **தேனி மாவட்டம்:** போடி அருகே சங்கராபுரம் நடுத்தெருவைச் சேர்ந்த சுப்புராம் மனைவி ராஜம்மாள்(60). அதே பகுதியைச் சேர்ந்த ராஜூ(43) ராஜம்மாளிடம் சில்மிஷம் செய்ய முயற்சி. ராஜம்மாள் புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 62. | 07.1.2011 | **கோவை மாவட்டம்:** கேரள திருவனந்தபுரம் அருகேயுள்ள குரக்கடாவைச் சேர்ந்த அஸ்வத் அசோக்(19) பிலால் முகமது(19) இருவரும் கோவை குனியமுத்தூர் கல்லூரியில் பிஎஸ்சி முதலாம் ஆண்டு படித்தனர். அதே கல்லூரியில் 2ம் ஆண்டு விடுதியில் தங்கி படிக்கும் மாணவர்கள் 7பேர் இருவரையும் கடத்திச் சென்று ராகிங். | ராகிங் | தினகரன் |
| 63. | 07.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அயனவாரம் சேர்னமால்யா மெட்ரிக் பெண்கள் மேல்நிலைப்பள்ளி படிக்கும் 10ம் வகுப்பு மாணவிகள்35 பேரை ஆசிரியைகள் அடித்துச் சித்திரவதை செய்ததாக பாதிக்கப்பட்ட மாணவிகள் புகார். | வகுப்பறை வன்முறை | சன்நியூஸ் (23.12.10) |
| 64. | 07.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை குறிஞ்சி பெரியசேர்வை தெருவில் வசிக்கும் ராமகிருஷ்ணனின் மகன் சுதர்சன்(3). அங்கன்வாடியில் பயிலும் சுதர்சனை ஆசிரியர் சூடுடான குக்கரால் சூடுபோட்டு | வகுப்பறை வன்முறை | வித்யாசாகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துன்புறுத்தியதாக மாணவனின் பெற்றோர் புகார். | | |
| 65. | 1.1.2011 | **சென்னை மாவட்டம்:** பெரம்பலூர் திருநகர் அருகே உள்ள இந்திராநகர் பகுதியில் பிறந்து 2 நாட்களே ஆன ஆண் குழந்தையை துண்டில் போர்த்தி குப்புறபடுக்க வைத்து மண்ணை போட்டு மூடி அதன்மேல் கருங்கல்லை வைத்திருந்தனர். அப்பகுதி மக்கள் அந்த குழந்தையை உயிருடன் மீட்டனர். | சிசுக்கள் மீதான வன்முறை | பிரபாகர் |
| 66. | 2.1.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை நகராட்சியில் 13,14,15ம் வார்டுகளுக்கு கடந்து ஆறு நாட்களாக குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை என பொதுமக்கள் நகராட்சி நிர்வாகத்திடம் புகார் கூறியும் நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் போராட்டம். | சுகாதாரக்கேடு | பிரபாகர் |
| 67. | 4.1.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை அருகே சொக்காம்பட்டியைச் சேர்ந்த பெருமாள் மகள்கள் ஜெயந்தி(9) சத்யா(9) ஜெயலட்சுமி(9) வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை 30 வயது மர்ம பெண் கடத்திச் சென்றார். திருச்சி பேருந்து நிறுத்தத்தில் அழுது கொண்டிருந்த குழந்தைகளை கோட்டை காவல்நிலையத்தில் ஏட்டாக இருக்கும் ஐயப்பன் மனைவி மஞ்சுளா மீட்டு கண்டோன்மென்ட் காவல் நிலையத்தல் ஒப்படைத்தார். | குழந்தைகள் மீதான வன்முறை | பிரபாகர் |
| 68. | 4.1.2011 | **திருச்சி மாவட்டம்:** கன்டோன்மென்ட் பகுதியில் உள்ள பெண்கள் பள்ளியில் படிக்கும் மாணவிகள் பள்ளி முடிந்து வீட்டிற்கும் வரும் வழியில் மாணவிகளை வழிமறித்து அதே பகுதியைச் சேர்ந்த சென்ட்ரிங் தொழில் செய்யும் புருஷோத்தமன் சில்மிஷம் செய்ததாக புகார். புருஷோத்தமன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | பிரபாகர் |
| 69. | 5.1.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை | சிசுக்கள் மீதான | பிரபாகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகே ஊத்துக்குழி கிழக்குத்தெரு முட்புதரில் பெண் குழந்தை கிடந்ததாக பொது மக்கள் புகார். மீட்கப்பட்ட குழந்தை மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை. | வன்முறை | |
| 70. | 5.1.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை நகராட்சியில் 27 வார்டுகளில் சிமென்ட்சாலை, சாக்கடை வசதி, குப்பைகளை அள்ளுதல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவேற்றவில்லை, இலவச எரிவாயு அடுப்பு வழங்கவில்லை காவிரி குடிநீர் மற்றும் உப்புநீரும் முறையாக வழங்குவதில்லை என பொதுமக்கள் சாலை மறியல். | அடிப்படை வசதியின்மை | பிரபாகர் |
| 71. | 7.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆரணி அடுத்த கல்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த வடிவேலு(25) மனைவி சோனியா குழந்தை வைஷ்ணவி (9 மாதம்). கணவன் மனைவி குடும்பத் தகராறில் வடிவேலு குழந்தையை தூக்கி வந்து சித்திரவதை செய்ததாக கவுதமி புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 72. | 7.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** பேரணாம்பட்டு டவுன் கலைஞர் நகரைச் சேர்ந்த சுந்தரேசன் மனைவி கவுதமி(24). வீட்டில் மண்ணெண்ணெய் விளக்கை எலி தள்ளியதில் தீப்பற்றி கவுதமி மரணம். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 73. | 7.1.2011 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை தாலுகா கருமாண்டிசெல்விபாளையம் சூலக்காத்தான்வலசு பகுதியில் 20 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதி மக்கள் 20 ஆண்டுகள் பயன்படுத்தி வந்த நடைபாதையாக தனியாருக்கு சொந்தமானதாக ஒரு சமூகத்தினர் பாதைக்கு கம்பிவேலி அமைத்ததால் குழந்தைகள் பள்ளிக்கு செல்லமுடியாமலும் 2 கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்வதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் மாவட்ட ஆட்சியர் | குழந்தைகள் மீதான வன்முறை | வித்யாசாகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சவுண்டையாவிடம் புகார். | | |
| 74. | 7.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை ஈகோ கிரீன் யனிட் அமைப்பை நடத்தி வருபவர் பாபு. 15 சுய உதவிக்குழுக்களை தேர்வு செய்து கைவினைப்பொருள் அபிவிருத்தி ஆணையரகத்தில் வழங்கி பயனாளிகளுக்கு நிதியுதவி கோரினார். உதவி இயக்குனர் குருமூர்த்தி(56) ரூ. 20,000 லஞ்சம் கேட்டதாக பாபு புகார். லஞ்சம் வாங்கும்போது குருமூர்த்தி கைது. | லஞ்சம் | வித்யாசாகர் |
| 75. | 7.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை, ராமநாதபுரம், திருச்சி தனியார் பெண்கள் மெட்ரிக் பள்ளியில் அரசு நிர்ணயித்ததை விட கூடுதல் கட்டணம் வசூலித்ததாக சாலை மறியலில் ஈடுபட்ட 150க்கும் மேற்பட்ட பெற்றோர் மீது காவலர்கள் வழக்கு. | பள்ளிகளில் கூடுதல் கட்டணம் வசூல் & வகுப்பறை வன்முறை | வித்யாசாகர் |
| 76. | 08.1.2011 | **தேனி மாவட்டம்:** கூழையனூர் சங்கிலிசாமியின் தந்தை ராஜூ மரணம். ராஜூவை மயானத்தில் அடக்கம் செய்ய ஆதிக்கச்சாதியினர் எதிர்ப்பு தெரிவித்ததோடு ஆதிக்கச்சாதியினர் சங்கிலிசாமியைத் தாக்கியாக புகார் கொடுத்தும் அரசும், காவல்துறையும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என சங்கிலிசாமி தேசீய மனித உரிமை ஆணையத்தில் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 77. | 08.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை எல்லீஸ் நகரைச் சேர்ந்த மாலதிக்கும், நந்தினிக்கும் பணப்பிரச்சனை. பாலாஜி மாலதியை மிரட்டியதாக மாலதி புகார். விசாரணையில் பாலாஜி(39) பத்தாம் வகுப்பு படித்த இவர் சட்டப்படிப்பு (எல்.எல்.பி.) படித்திருப்பதாக கூறி கட்டப்பஞ்சாயத்தில் ஈடுபட்டதாக பாலாஜியை எல்லீஸ் நகர் காவலர்கள் கைது செய்தனர். | பெண்கள் மீதான வன்முறை & கட்டப்பஞ்சாயத்து | தினமலர் |
| 78. | 08.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை | பள்ளியில் கூடுதல் | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சின்ன சொக்கிகுளத்திலுள்ள தனியார் மெட்ரிக் பள்ளியில் அரசு நிர்ணயித்த கட்டணைத்தை விட கூடுதல் கட்டணம் வசூல் செய்யப்படுவதாகக் கூறி பெற்றோர்கள் தல்லாகுளத்திலுள்ள மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகம் முன்பு முற்றுகை. | கட்டணம் வசூல் & வகுப்பறை வன்முறை | |
| 79. | 08.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஜெய்ஹிந்துபுரம் நேரு தெருவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் மகள் அதே பகுதியில் உள்ள பள்ளியில் 10ம் வகுப்பு படித்தார். மாலையில் பாலசுப்பிரமணியம் பள்ளியில் இருந்து மகளை அழைத்துவரும்போது அதே பகுதியைச் சேர்ந்த தினேஷ்(23) லோகநாதன்(24) சண்முகக்கனி(19) மூவரும் கேலி செய்ததாக பாலசுப்பிரமணியம் புகார். இளைஞர்கள் மூவரும் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கட்டப்பஞ்சாயத்து | தமிழ்சுடர் |
| 80. | 08.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் பார்வதிபுரம் கே.பி.ரோடு பயோனியா தோப்பு பகுதியைச் சேர்ந்த குமரேசன்(54) விருதுநகர் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு டிரைவராக பணிபுரிந்தார். லஞ்ச வழக்கில் கைதான குமரேசன் தூக்குப்போட்டு தற்கொலை. தனது சாவுக்கு உயர் அதிகாரி காரணம் என கடிதம் எழுதி வைத்திருந்தார். | பெண்கள் மீதான வன்முறை & கட்டப்பஞ்சாயத்து | தினத்தந்தி |
| 81. | 08.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையத்தில் சிறப்பு பட்டாலியன் காவல்படை பிரிவில் காவலராக இருப்பவர் ஜான்சி(24) திருமணமாகி 9 மாதங்கள் ஆன நிலையில் கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த கர்ப்பிணி ஜான்சி தீக்குளித்து மரணம். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 82. | 8.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை தண்டராம்பட்டு சே.கூடலூர் கிராமத்தைச் சேர்ந்த முனியம்மாள்(40). அதே பகுதியைச் | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த ராஜாமணி(45) இருவருக்குமிடையே நிலத்தகராறு. ராஜாமணி மற்றும் அவரது தம்பி ஜெயபால்(32) குமார்(35) மூவரும் தாக்கியதாக முனியம்மாள் புகார். | | |
| 83. | 8.1.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் கள்ளூர்பாக்கம் ரோடு பகுதியைச் சேர்ந்த குமாருக்கு சொந்தமான தீப்பெட்டி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்த நளினி(40) மருத்துவமனையில் சிகிச்சை. | பட்டாசு ஆலை தீ விபத்து | பாஸ்கர் |
| 84. | 9.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை லட்சுமிபுரத்தைச் சேர்ந்த பிரகலாத் சிங், கோபு என்பவருடன் வாடகை ஒப்பந்தம் செய்து லட்சுமிபுரம் அருகே பாத்திர கடை நடத்தி வருகிறார். கோபுக்கும் அவரது சகோதரர் தாமோதரனுக்கும் தகராறு. கடையை காலி செய்து தாமோதரனிடம் ஒப்படைக்குமாறு விளக்குத்தூண் இன்ஸ்பெக்டர் சக்கரவர்த்தி மிரட்டுவதாக பிரகலாத் சிங் மதுரை ஐகோர்ட் சிளையில் மனு தாக்கல். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 85. | 9.1.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருத்தணி ஒன்றியம், கார்த்திகேயபுரம் ஊராட்சிக்குட்பட்ட பத்மாபுரம் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேசன்(35) மனைவி பத்மா(25) குழந்தைகள் சந்தோஷ்(3) ரஞ்சித்(1) வெங்கடேசனின் தம்பி அரிபாபு(30) அனைவரும் ஒரே வீட்டில் வசித்தனர். அரிபாபுக்கும் பத்மாவுக்கும் நடந்த தகராறில் மனமுடைந்த அரிபாபு தூக்குபோட்டுத் தற்கொலை. அரிபாபு இறந்ததால் மனமுடைந்த பத்மா தனது குழந்தை ரஞ்சித்துடன் கிணற்றில் விழுந்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | தினமலர் |
| 86. | 9.1.2011 | **மதுரை மாவட்டம்:** செக்கானுாரணியைச் சேர்ந்த | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆசைத்தம்பி(24) மகாலெட்சுமி(20) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். ஆத்திரமடைந்த பெற்றோர் அரிவாள், கம்புகளுடன் வந்து தாக்க முயன்றதாக காதல் ஜோடி திருமங்கலம் டவுன் காவல் நிலையத்தில் தஞ்சம். | | |
| 87. | 9.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** ராமநாதபுரம் பரமக்குடி அருகே பாம்பூரைச் சேர்ந்த சுரேஷ்(40) செம்மறி ஆடு வளர்க்கும தொழில் செய்கிறார். அவரிடம் கொத்தடிமையாக ஆடு மேய்த்த பாலசந்திரன், மெடிசன் 2 சிறுவர்கள் மீட்கப்பட்டனர். இருவரையும் அவர்களது பெற்றோர் ரூ.10 ஆயிரத்திற்கு விற்றதாக சிறுவர்கள் புகார். | கொத்தடிமை | தினகரன் |
| 88. | 9.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை திருக்கோஷ்டியூர் அருகே உள்ள மேலபட்டமங்கலத்தைச் சேர்ந்த வெள்ளக்கண்ணு மகள் ரஞ்சிதா(21) மேலூர் தாலுகா கீழவளவில் அக்கா வீடடிற்கு வந்த ரஞ்சிதா அதே பகுதியைச் சேர்ந்த சஞ்சய்(28) இருவரும் காதலித்தனர். இந்நிலையில் ரஞ்சிதாவை சஞ்சய் கடத்தியதாக பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கடத்தல் | தமிழ்சுடர் |
| 89. | 9.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கேதையறும்பு ஊராட்சி கேதையறும்பு கிராமத்தில் 300க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். திருமாணிக்கபுரம் கிராமத்தில் 25 ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் இல்லை என கிராம மக்கள் புகார். | அடிப்படை வசதியின்மை | தமிழ்சுடர் |
| 90. | 9.1.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் அருகேயுள்ள இறையமங்கலத்தைச் சேர்ந்த அரிகிருஷ்ணன்(27) மனைவி சங்கீதா(24) குழந்தைகள் ஹேமந்த்குமார்(3) கணேஷ்(2). கணவன் மனைவி தகராறில் | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>குழந்தைகள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | --- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனமுடைந்த சங்கீதா குழந்தைகள் மேல் மண்ணெண்ணெய் தானும் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை. மருத்துவமனையில் கணேஷ் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. | | |
| 91. | 10.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சிங்காநல்லூரில் செயல்பட்டு வந்த லட்சுமி இன்ஸ்டரீஸ் பிளேஸ்மென்ட் என்ற தனியார் வேலை வாய்ப்பு நிறுவனம் இளைஞர்களுக்கு வேலை பெற்றுத் தருவதாக கூறி ஐந்து கோடி ரூபாய் மோசடி. நிர்வாக இயக்குனர் காளீஸ்வரன் மற்றும் பொது இயக்குனர் உஷாராணி இருவர் கைது. | மோசடி | தினமலர் |
| 92. | 10.1.2011 | **தேனி மாவட்டம்:** தேனி வைகை அணையில், ஆற்றை ஒட்டியுள்ள சுடுகாட்டு பகுதியில், புதருக்குள் பிறந்த பச்சிளம் ஆண் குழந்தை கிடந்ததாக பொதுமக்கள் புகார். மீட்கப்பட்ட குழந்தை தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை. | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 93. | 10.1.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு அடுத்த அவல்பூந்துறையைச் சேர்ந்த செந்தில்குமார்(30) கேரள பாலக்காடு வடக்கன்கரை பகுதியில் ரிக்வண்டியில் போர்வெல் தொழிலாளியாக வேலை செய்தார். உடன் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கும் செந்தில்குமாருக்கும் ஏற்பட்ட தகராறு. ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் ஏர்கம்ப்ரசர் மூலம் காற்றை செந்தில்குமார் உடலுக்குள் செலுத்தி கொலை செய்ததாக செந்தில்குமாரின் பெற்றோர் புகார். | கொலை | தினகரன் |
| 94. | 10.1.2011 | **சென்னை மாவட்டம்:** மீனம்பாக்கத்தைச் சேர்ந்த மேரி(70). மேரியின் மகன் சாப்பாடு போடாமல் தன்னை வீட்டை விட்டு துரத்தியதாகவும் மகனிடம் இருந்து தனக்கு ஜீவனாம்சம் தர மேரி | முதியவர்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நீதிமன்றத்தில் மேரி மனு தாக்கல். | | |
| 95. | 10.1.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் தாதகாப்பட்டி வசந்த நகரைச் சேர்ந்த மோகன்ராஜ் மகள் திவ்யசுந்தரி(16) தோழி கீர்த்திகா(16) தனியார் பள்ளியில் 10–ம் வகுப்பு படித்த இருவரையும் காணவில்லை என புகார். காணாமல் போன மாணவிகள் இருவரும் பெங்களூரில் மீட்கப்பட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 96. | 10.1.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மத்திய சிறையில் தூத்துக்குடியைச் சேர்ந்த சுடலைமுத்து(33) நாகர்கோவிலைச் சேர்ந்த டாரிக்சேவியர்(30). திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையில் தங்களுக்கு தரமான சாப்பாடு மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்ககோரி கைதிகள் இருவரும் சிறையில் உண்ணாவிரதப் போராட்டம். | சிறைக்கைதிகள் மீதான வன்முறை | தினகரன் |
| 97. | 10.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை வி.கே.புரம் அருகே உள்ள வீராணத்தைச் சேர்ந்த பீர்முகம்மது மனைவி ருகையால்பீவி(32). ருகையால்பீவிக்கு வண்ணார்பேட்டை தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நடந்தது. மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் ருகையால்பீவி இறந்துவிட்டதாக உறவினர்கள் புகார். | மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | தமிழ்சுடர் |
| 98. | 10.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை உத்தங்குடியைச் சேர்ந்த இதயதுல்லா மகன் ரபீக்(14) 10ம் வகுப்பு படித்து வந்தார். அரையாண்டுத் தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்றதால் பெற்றோர் திட்டுவார்களே என பயந்த ரபீக்கை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 99. | 10.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் மேட்டுப்பட்டி அருகே உள்ள அடிநாட்டை காம்பவுண்டு | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகுதியில் வசிப்பவர் ஜெயராமன்(54) மனைவி வேலுத்தாயி(52). வேலுத்தாயி வீட்டில் தூக்குப்போட்டுத் தற்கொலை. | | |
| 100. | 10.1.2011 | **சென்னை மாவட்டம்:** பெருந்துறை அடுத்த துடுப்பதி ஊராட்சி பாலக்கரை கிராமத்துக்கான சுடுகாடு எல்பிபீ வாய்க்கால் அருகே அமைந்துள்ளது. இந்த சுடுகாட்டில் பாதி எரிந்து நிலையில் பெண் பிணம் கிடந்ததாக பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | வித்யாசாகர் |
| 101. | 10.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை துரைப்பாக்கம் பிள்ளையார் கோயில் தெரு ராமன் நகரைச் சேர்ந்த அருளானந்தம்(45) மனைவி மரியவிசுவாசம்(40). கணவன் மனைவி தகராறில் அருளானற்தம் சுத்தியால் தாக்கியதில் மரியவிசுவாசம் மரணம். அருளானந்தம் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 102. | 10.1.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பத்தூர் அடுத்த ஜோலார்பேட்டை எஸ்.கோடியூர் அனுமந்தகவுண்டர் தெருவைச் சேர்ந்த ராஜேஷ் மனைவி புவனேஸ்வரி(27) குழந்தை தாட்சாயிணி (11 மாதம்). இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். கணவர் குடும்பத்தார் ராஜேசுக்கு இரண்டாம் திருமணம் செய்ததை தட்டிக் கேட்ட புவனேஸ்வரிக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கணவர் மற்றும் குடும்பத்தார் மீது புவனேஸ்வரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 103. | 11.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சோழவந்தான், அலங்காநல்லூர் பகுதி ரேசன் கடைகளில் இருந்து கடத்தப்பட்ட 50 கிலோ எடையுள்ள 10 உளுந்தம்பருப்பு மூடைகளைக் வாகன சோதனையில் போது காவலர்கள் மீட்டனர். லாரி டிரைவர் முத்துராமலிங்கம்(41), ரவி(45) ஆகிய இருவர் கைது. | ரேசன் பொருட்கள் கடத்தல் | தினமலர் |
| 104. | 11.1.2011 | **சென்னை மாவட்டம்:** ஈரமான | பெண்கள் மீதான | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரோஜாவே திரைப்படத்தில் நடித்த நடிகர் சிவா(42) மனைவி மீனாட்சி(37). இவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் உள்ள நிலையில் சிவா தினமும் குடித்துவிட்டு மீனாட்சியைத் தாக்கியதாக சிவா மீது மீனாட்சி புகார். | வன்முறை | |
| 105. | 11.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சரவணம்பட்டியைச் அருகே விளாங்குறிச்சி சம்பத் நகரைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் மனைவி தாரணி, குழந்தைகள் சசிதரன், ஜோதிகா(11). அப்பா குடித்துவிட்டு வந்து அம்மாவை அடித்து துனபுறுத்துவதாக குழந்தைகள் இருவரும் கோவை கமிஷனரிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 106. | 11.1.2011 | **சென்னை மாவட்டம்:** கோட்டர்புரம், குடிசை மாற்றுவாரிய குடியிருப்பைச் சேர்ந்த ஜெயராமன் ராணி தம்பதிகளின் மகள் ஷோபனா(32) இவர் துணை நடிகையாக நடித்து வந்தார். மஞ்சள் காமாலை மற்றும் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டதால் மனமுடைந்த ஹோபனா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | தினமலர் |
| 107. | 11.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடியைச் சேர்ந்த தாயம்மாள்(85). இவருக்கு, 5 மகன்கள், 5 மகள்கள் உள்ளனர். பணத்தை முதன்மையாக எண்ணிய மகன்கள் வீட்டை விட்டு துரத்தியதாகவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி தாயம்மாள் புகார். | முதியவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 108. | 11.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் சின்னகடை தெருவைச் சேர்ந்த கோவிந்தராஜன்(38) மனைவி சாந்தி(30) மாற்றுத்திறனாளிகள். தங்களுக்கு மூன்று ஆண்டுகளாக ரேசன் கார்டு தராமல் அலைக்கழிப்பதாக ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் | மாற்றுத்திறனர்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாற்றுத்திறனாளிகள் இருவரும் புகார். | | |
| 109. | 11.1.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருக்கோவிலூர் அரசு போக்குவரத்துக் கழக பணிமனையில் மணல் பதுக்கிவைக்கப்பட்டு லாரிகள் மூலம் வெளிமாவட்டங்களுக்கு கடத்திச் செல்லப்பட்டதாக புகார். டிப்போ அதிகாரிகளின் முழு ஒத்துழைப்புடன் மணல் கடத்தல் நடைபெற்றதாக புகார். | மணல் கடத்தல் | தினமலர் |
| 110. | 11.1.2011 | **சென்னை மாவட்டம்:** பெரம்பலூர் மனகோபாலபுரத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வம்(54) தங்களது வீட்டுமனையை பாகப்பிரிவு பத்திரத்தை பதிவு செய்தவதற்கு சார்பதிவாளர் பெரியசாமியை அணுகினார். அவர் ரூ. 10 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக பன்னீர்செல்வம் புகார். ரூ. 5 ஆயிரம் லஞ்சம் வாங்கும்போது பெரியசாமி கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 111. | 11.1.2011 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் சிதம்பரம் அருகே உள்ள கிள்ளை கீழ் அனுவம்பட்டு காரப்பாடி கிராமத்தைச் சேர்ந்த கார்த்திகேயன் மனைவி சண்முகபிரியா(29). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த சண்முகப்பிரியா ரயில் தண்டவாளத்தில் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | தினத்திந்தி |
| 112. | 11.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே தீர்த்தக்காடு பகுதியில், ஆதிதிராவிடர்களுக்கு அரசு ஒதுக்கிய நிலத்தை மீட்டுத்தரக்கோரி பொதுமக்கள் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகை. தீக்குளிக்க முயன்ற பெண்கள் உள்பட 147 பேர் கைது. | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 113. | 11.1.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் காமாட்சி நகரைச் சேர்ந்த சாமிநாதன் மனைவி சந்தானலெட்சுமி(35) குழந்தைகள் ஹேமன்(7) மதுபிரியா(5) கணவன் மனைவி தகராறில் மனமுடைந்த | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>தற்கொலை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சந்தானலெட்சுமி தனது குழந்தைகளுடன் ரயில் முன் விழுந்து தற்கொலை. படுகாயமடைந்த சிறுவன் மருத்துவமனையில் அனுமதி. | | |
| 114. | 11.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை மானாமதுரை தாலுகா வி.கரிசல்குளத்தைச் சேர்ந்த கயல்விழி(19). அதே பகுதியைச் சேர்ந்த சங்கர்(23) கயல்விழியைத் திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல் வன்முறை. 7 மாத கர்ப்பிணியான கயல்விழியை திருமணம் செய்ய சங்கர் மறுத்ததாக கயல்விழி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 115. | 11.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆம்பூர் அடுத்த அரங்கல்துருக்கம் பகுதியைச் சேர்ந்த சந்தோஷ்(22) மனைவி பாக்கியாஞ்சலி(19). மாடு மேய்க்க சென்ற பாக்கியாஞ்சலியை காணவில்லை என புகார். அதே பகுதி விவசாய கிணற்றில் பாக்கியாஞ்சலி இறந்துகிடந்தாக பொதுமக்கள் புகார். காவலர்கள் விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 116. | 11.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஜோலார்பேட்டை அருகே உள்ள பால்னாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த 5ம் வகுப்பு மாணவியை அதே பகுதியைச் சேர்ந்த ராஜேஷ்(22) பாலியல் பலாத்காரம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கர் |
| 117. | 11.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு அடுத்த மேல்விஷாரம் புதுப்பேட்டையை சேர்ந்த பாபு(45) மகள் அதே பகுதியைச் சேர்ந்த அபீப் வீட்டில் வேலை செய்தார். அபீப் திருமணம் செய்துகொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி அந்தப் பெண்ணை பாலியல் பலாத்காரம். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 118. | 11.1.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் மேல்பட்டி சாலை பீரான் நகரைச் சேர்ந்த முனியம்மாள்(60). அதே பகுதியைச் சேர்ந்த ஷாஜகான்(30) | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பைரோஷ்(27) இருவரும் முனியம்மாளிடம் பணம் கடன் வாங்கியிருந்தனர். பணத்தை திருப்பிக் கேட்ட முனியம்மாளை இருவரும் தாக்கியதாக இருவர் மீது முனியம்மாள் புகார். | | |
| 119. | 11.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை கீழ்பென்னாத்துார் கிராமத்தைச் சேர்ந்த ராதா(51) மனைவி சின்னத்தாய். ராதாவின் தம்பி அண்ணாமலை(50). அண்ணன் தம்பி நிலத்தகராறில் ஆத்திரமடைந்த அண்ணாமலை மற்றும் அவரது மகன் ரமேஷ்(27) ராதா அவரது மனைவி சின்னத்தாயை அரிவாளால் வெட்டியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 120. | 11.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த தானியம்பாடி ரோட்டில் வசிப்பவர் மல்லிகா(38). உறவினர்கள் குமார், பூங்காவனம்(66) இந்திராகாந்தி(40) மூவரும் சேர்ந்த மல்லிகாவை ஆபாசமாக திட்டி தாக்கியதாக 3பேர் மீது மல்லிகா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 121. | 12.1.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் பனையூர் ராமர் மகன் கார்த்திக்ராஜா(15). சின்ன அனுப்பானடி அரசு பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் கார்த்திக்ராஜாவை காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 122. | 12.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை யா. ஒத்தக்கடை அருகே கொடிக்குளத்தில் ஒரே சமூகத்தைச் சேர்ந்த இரு பிரிவினருக்குள் ஏற்பட்ட மோதலையடுத்து போலீஸ் பாதுகாப்பு. | மோதல் | தினமலர் |
| 123. | 12.1.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் நான்காவது ரேஷன் கடையில் உணவு கடத்தல் இன்ஸ்பெக்டர் சக்கரவர்த்தி சோதனை. சோதனையில் கடையில் இருந்து | ரேசன் அரிசி கடத்தல் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடத்த முயன்ற 60மூடை ரேசன் அரிசியை பறிமுதல். விற்பனையாளர் பாபு, உதவியாளர் ஜெயராமன், ராஜசேகரன், முனியசாமி 4பேர் கைது. | | |
| 124. | 12.1.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அரசு கலை கல்லூரி பிற்படுத்தப்பட்டோர் விடுதி மாணவர்கள் இரவு பல்லி விழுந்த உணவு சாப்பிட்டதால் 60 மாணவர்கள் வாந்தி, மயக்கம் அடைந்த மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை. | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 125. | 12.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை திலகர்திடல் காவல்நிலைய ஏட்டு ஜெயப்பிரகாஸ்(43) கட்டுப்பாட்டு அறை ரோந்து வாகனப்பணியில் இருந்தார். உதவிகமிஷனர் சண்முகநாதன் ரோந்து சென்றபோது ஏட்டு ஜெயப்பிரகாஸ் பணியின் போது போதையில் இருந்ததால் ஜெயபிரகாசை சஸ்பெண்ட் செய்ய சண்முகநாதன் உத்தரவு. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 126. | 12.1.2011 | **மதுரை மாவட்டம்:** கொண்டித்தோப்பு பெரியண்ண முதலித் தெருவைச் சேர்ந்த ரமேஷ் மனைவி ஜெரீனா(30). ஜெரீனாவின் நகையை வீட்டில் வேலை செய்த ரூபா(62) திருடியதால் ஆத்திரமடைந்த ஜெரீனா ரூபாவை கத்தியால் குத்தி கொலை. ஜெரீனா கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 127. | 12.1.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் குடியாத்தம் மவுசன் பேட்டையைச் சேர்ந்த நூர்முகமது(23) கோழிப்பண்ணையை நடத்தி வந்தார். தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் கடன் தொல்லையால் மனமுடைந்த நூர்முகமது தூக்குப்போட்டுத் தற்கொலை. | கந்து வட்டிக் கொடுமை | தீக்கதிர் |
| 128. | 12.1.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி தாலுகா பசும்பொன் நகரில் அருந்ததிய மக்கள் வசிக்கும் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டுமென மார்க்சிஸ்ட் | தலித்துகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கம்யூனிஸ்ட் கட்சியும் அருந்ததிய மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். விசாரணை என்ற பெயரில் அருந்ததிய மக்களை காவல்துறையினர் மிரட்டுவதாக அருந்ததிய மக்கள் புகார். | | |
| 129. | 12.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை செங்கம் தாலுகா ரவன்தவாடி கிராமத்தைச் சேர்ந்த வெங்கட்ராமன். விசாரணைக் கைதியான வெங்கட்ராமன் வேலூர் மத்திய சிறையில் தற்கொலை. | சிறைக்கைதி மரணம் | பாஸ்கர் |
| 130. | 12.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு சோளிங்கர் அடுத்த கொண்டகுப்பம் சத்திரம் புதூரைச் சேர்ந்த ராகவன் மனைவி பாஞ்சாலை(42). விஜயன் மனைவி ரமணி இருவருக்கும் நிலத்தகராறு. ரமணி மற்றும் உறவினர் ஒருவர் சேர்ந்து பாஞ்சாலையை கடத்திச் சென்று அவரது வாயில் விஷம் ஊற்றி கொலை செய்ய முயன்றதாக ரமணி மீது பாஞ்சாலை புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | பாஸ்கர் |
| 131. | 12.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு கிளாம்பாடி கிராமத்தைச் சேர்ந்த பூபாளன் மனைவி ஜெயலெட்சுமி (எ) விஜயலெட்சுமி(23). விஜயலெட்சுமி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 132. | 12.1.2011 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் அடுத்த வேலூர்பேட்டையைச் சேர்ந்த லோகநாதன்(35) மனைவி சாந்தி(28). ஏரிக்கால்வாய் தூர்வாரும் பணி முடிந்து திரும்பிக் கொண்டிருந்த சாந்தி மீது மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டதில் படுகாயமடைந்த சாந்தி மருத்துவமனையில் சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 133. | 12.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆரணி தச்சூர் சாலையில் உள்ள கொங்குலியர் தெருவைச் சேர்ந்த கணேசன் மகள் சுகந்தி (18). வயிற்றுவலி காரணமாக சுகந்தித் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீக்குளித்துத் தற்கொலை. | | |
| 134. | 12.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை கீழ்பென்னாத்தூர் அருகே உள்ள சோமாசிபாடியைச் சேர்ந்த பிரேம்குமார்(25) மனைவி பிரேமா சாந்தகுமாரி(23). திருமணமாகி 5 வருடங்கள் ஆன நிலையில் சாந்தகுமாரி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் |
| 135. | 12.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை புதுவாணியங்குளம் 3வது தெருவைச் சேர்ந்த கோமதி(33) அதே பகுதியைச் சேர்ந்த தாமோதரன். இருவருக்கும் முன்விரோதம். தாமோதரன் கோமதியை ஆபாசமாக பேசியதோடு அடித்ததாக தாமோதரன் மீது கோமதி புகார். காயமடைந்த கோமதி மருத்துவமனையில் சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 136. | 12.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஒட்டேரி சத்தியவாணி முத்து நகர் பாபு(28) மனைவி லெட்சுமி(25). கணவன் மனைவி இருவரும் விஜயாவை கடத்தி வந்து பாலியல் தொழில் ஈடுபடுத்தியதாக இருவரும் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கர் |
| 137. | 13.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வந்தவாசி கோட்டை தெருவைச் சேர்ந்த அலெக்சாண்டர் மனைவி மாலா(28). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த மாலா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் |
| 138. | 13.1.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** பொன்னேரி அடுத்த பாக்கம் கிராமத்தில் தனியாருக்கு சொந்தமான இறால் பண்ணையில் தேவனாஞ்சேரியை சேர்ந்த நரிக்குறவர் கோபியின் மகன் பாலகிருஷ்ணன் வேலை செய்தான். பண்ணையில் மர்மமான முறையில் பாலகிருஷ்ணன் இறந்து கிடந்ததாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 139. | 13.1.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி | காவல் நிலையச் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகே ஆரியபட்டியைச் சேர்ந்த கலைவாணன்(30) மதுரையிலுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல்படை காவலர். அவரது ஊரான ஆரியபட்டியில் இலவச வேட்டி சேலைகளுக்கான டோக்கனை கிராம நிர்வாக அலுவலர் செல்வமணி வழங்கினார். கலைவாணன் மது அருந்திவிட்டு செல்வமணியை கொலை செய்து விடுவதாக மிரட்டியதாக கிராம நிர்வாக அதிகாரி புகார். கலைவாணன் கைது. | சித்திரவைத | |
| 140. | 13.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசியில் தேசிமயமாக்கப்பட்ட வங்கிக் கிளை செயல்பட்டு வருகிறது. கள அதிகாரி வேல்முருகன், ஜெயச்சந்திரன் வங்கியில் வாடிக்கையாளர்களை கேட்காமலேயே அவர்களுக்கு லோன் கொடுத்து போல் கணக்கு எழுதி 1 கோடி மோசடி செய்ததாக வங்கியின் தென் மண்டல மேலாளர் தேவ சேனாபதி புகார். ஊழியர்கள் 2 பேருக்கு வலைவீச்சு. | மோசடி | தினத்தந்தி |
| 141. | 13.1.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட மலேரியா தடுப்பு அலுவலகம் களப்பணி உதவியாளரர் தேவராஜன்(41). இவருக்கு கீழ் வேலை பணியாளர்கள் ஒவ்வொருவரிடமும் மாதம் ரூபாய் 1000 லஞ்சம் வாங்கியதாகவும் தாராத பணியாளர்களை மிரட்டுவதாகவும் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் தேவராஜன் மீது புகார். லஞ்சம் வாங்கும்போது தேவராஜன் கைது | லஞ்சம் | தினத்தந்தி |
| 142. | 13.1.2011 | **நாகை மாவட்டம்:** நாகை தரங்கம்பாடி சின்னங்குடியைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் பாண்டியன்(19) அதே பகுதியைச் சேர்ந்த மணிகண்டன், மணிவண்ணன், பாஸ்கரன், கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர். அந்த வழியாக ரோந்து வந்த | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை துப்பாக்கியால் சுட்டதில் மீனவர் பாண்டியன் மரணம். | | |
| 143. | 13.1.2011 | **சென்னை மாவட்டம்:** நீலாங்கரை அருகே நைனார்குப்பம் பகுதியைச் சேர்ந்த ரவி(40) மனைவி ரேவதி(35) மகன் திலிப்குமார்(19) பிளஸ்–2 மாணவன். கணவன் மனைவி தகராறில் ரேவதி தனது தாய்வீட்டிற்கு சென்றார். கணவர் மற்றும் மகனை காணவில்லை என ரேவதி புகார். திலிப்குமாரின் உடல் அவரது வீட்டின் பின்புற தோட்டத்தில் கண்டுபிடிப்பு. ரவியை காவலர்கள் தேடி வருகின்றனர். | மாணவர்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 144. | 13.1.2011 | **நெல்லை மாவட்டம்:** பாளையங்கோட்டை மத்திய சிறையில் ஆயுள்தண்டனை கைதி சுப்பிரமணியன்(45). சிறையில் சிறைக்கைதி சிலரால் தாக்கப்பட்ட சுப்பிரமணியம் மரணம். | சிறைக்கைதி மரணம் | தினகரன் |
| 145. | 13.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** குஜிலியம்பாறை அருகே ரெட்டியபட்டியை அடுத்த மணல்காட்டூர் கிராமத்திலுள்ள வறட்டாற்றில் மணல் கொள்ளை நடைபெறுவதாக மார்க்சிஸ்ட் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் ஆற்றை சுற்றி முற்றுகை போராட்டம். மணல் கடத்திய லாரி பறிமுதல். | மணல் கொள்ளை | தினகரன் |
| 146. | 13.1.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் சேர்ந்த தர்மன் மின் இணைப்பு பெற மின் இள நிலை பொறியாளர் சக்கரவர்த்தியை அணுகினார். அவர் ரூபாய் 10,000 ஆயிரம் கேட்டதாக தர்மன் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 147. | 13.1.2011 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல் பள்ளிபாளையம் அருகில் உள்ள கலியனூர் ஊராட்சி எம்.ஜி.ஆர் நகரில் அருந்ததியர் குடியிருப்பு அருகே ரியல் எஸ்டேட்காரர்களால் உருவாக்கப்பட்ட தீண்டாமைச்சுவர் உள்ளதாக அருந்ததியர் மக்கள் | தலித்துகள் மீதான வன்முறை & தீண்டாமைச் சுவர் | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புகார். | | |
| 148. | 13.1.2011 | ---- **மாவட்டம்:** கமுதி சுந்தரபுரத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களில் செவிலியர்கள் இல்லாததால் நோயாளிகள் அவதி. கர்ப்பிணிப் பெண்கள் மிகவும் சிரமத்திற்குள்ளவதாக பொதுமக்கள் புகார். | அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | தமிழ்சுடர் |
| 149. | 13.1.2011 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல் திருச்செங்கோடு நகர காவல்நிலையத்தில் இன்ஸ்பெக்டர் கருணாநிதி. வக்கீல்களை தரக்குறைவாக நடத்தியதோடு அரசு வழக்கறிஞர் மோகன் மீது பொய் வழக்கு புனைந்ததாகவும் வழக்கறிஞர்கள் மீது பொய் வழக்குப்போட்ட இன்ஸ்பெக்டர் கருணாநிதி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி வக்கீல்கள் போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 150. | 13.1.2011 | **திருச்சி மாவட்டம்:** முசிறி அந்தரப்பட்டி சாலை பகுதியில் வசிப்பவர் விஸ்வநாதன் (32) தனது நில உரிமைச்சான்று வாங்க கிராம அலுவலர் ஜெகன்நாதன்(56)னை அணுகினார். அவர் ரூபாய் 1000 லஞ்சம் கேட்டதாக விஸ்வநாதன் புகார். | லஞ்சம் | தமிழ்சுடர் |
| 151. | 13.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை நீலம்பூரில் உள்ள தனியார் கல்லூரியை சேர்ந்த மாணவ, மாணவிகள் தரமான கல்வி போதிக்கும் அளவுக்கு திறமைவாய்ந்த பேராசிரியர்களை நியமிக்க கல்லூரி நிர்வாகத்திற்கு உத்தரவிட வேண்டும் என கலெக்டர் அலுவலகத்தை முற்றுகை போராட்டம். | மாணவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 152. | 14.1.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு அருகே, மேலவிஷாரத்தைச் சேர்ந்த முகமதுஅலி(30) மனைவி அஜீரா பேகம்(25) குழந்தைகள் தனியா தாஷிபா(3) காஷியா தாஷிபா(2). தனது இரு பெண் குழந்தைகளையும் கிணற்றில் வீசி | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொன்றதாக முகமது அலி மீது அஜீராபேகம் புகார். | | |
| 153. | 14.1.2011 | **மதுரை மாவட்டம்:** சென்னை கூடுவாஞ் சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகள் அல்லி(17) அப்பளக் கம்பெனியில் உடன் வேலை செய்த மதுரை மகபூப்பாளையத்தைச் சேர்ந்த ராணி(33). வீட்டிற்கு வந்த அல்லியை அதே பகுதியைச் சேர்ந்த பரக்கத், அல்ஷாத், பாட்ஷா கடத்திச் சென்றதாக ராணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 154. | 14.1.2011 | **பொள்ளாச்சி மாவட்டம்:** பொள்ளர்சி ஆனைமலை நெல்லிக்குத்திப் பாறையைச் சேர்ந்த காளிமுத்து மனைவி கிருஷ்ணவேணி. இவர்களின் 6 மாத குழந்தையை அதே பகுதியைச் சேர்ந்த சிராஜ்நிஷா கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 155. | 14.1.2011 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி யூனியன் 4 வது வார்டு இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் 25 பேர் கொண்ட மர்ம கும்பல் புகுந்து வாக்குச் சீட்டுகளில் மையை ஊற்றினர். தேர்தல் அதிகாரி நாகராஜன் தாக்கப்பட்டார். ரகளை செய்த 11 பேர் கைது. சரியான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொடுக்காத இன்ஸ்பெக்டர் ராமகிருஷ்ணனை சஸ்பெண்ட் செய்ய ஐஜி கிருஷ்ணமூர்த்தி உத்தரவு. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 156. | 14.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை ராயப்பேட்டை துலுக்கானம் கோட்டம் பகுதியைச் சேர்ந்த ரவி(36) மனைவி சாந்தி (30). கணவன் மனைவி குடும்பத் தகராறி ரவி சாந்தியை கத்தியால் குத்திக் கொலை செய்ததாக ரவி மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 157. | 14.1.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யத்தை அடுத்த மருதூர் ராஜாபுரம் கிராமத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம் மனைவி | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுந்தரம்பாள்(70). வீட்டில் தனியாக இருந்த சுந்தரம்பாளை மர்ம நபர்கள் தாக்கிவிட்டு நகைகளை கொள்ளையடித்துச் சென்றனார். காயமடைந்த சுந்தரம்பாள் சிகிச்சை பலனின்றி மரணம். | | |
| 158. | 14.1.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகே வைகாசிப்பட்டியைச் சேர்ந்த ராஜேந்திரன் மனைவி கலாராணி(38). அதே பகுதியைச் சேர்ந்த சுரேஷ் கலாராணிக்கு அடிக்கடி மிஸ்டுகால் கொடுத்ததை கண்டித்த ராஜேந்திரனை சுரேஷ் அவரது உறவினர்கள் 8 பேர் தாக்கியதாக ராஜேந்திரன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 159. | 14.1.2011 | **ஈரோடு மாவட்டம்:** மேட்டுரைச் சேர்ந்த செல்வமணி மனைவி ருக்மணி மகன்கள் நவீன்குமார்(5), கோபிநாத்(4). கோபி பாரியூர் கொண்டாத்து காளியம்மள் கோயில் குண்டம் திருவிழாவிற்கு செல்வதாக வீட்டில் இருந்த குழந்தைகளுடன் ருக்மணியை காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 160. | 14.1.2011 | ------ **மாவட்டம்:** கடலாடி தாலுகா, சாயல்குடி அருகே கீழ அல்லிக்குளத்தைச், சேர்ந்த முருகேசன்(40) வாகனம் மோதி மரணம். மோதிய வாகனத்தைக் சாயல்குடி காவல் நிலையத்தில் பொதுமக்கள் ஒப்படைத்தனர். வாகனத்தில் இருந்தவர்கள் மீது வழக்கு போடாமல் அவர்களிடம் லஞ்சம் வாங்கிய இன்ஸ்பெக்டர் ராஜ்குமாரை கண்டித்து பொதுமக்கள் முற்றுகை போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 161. | 15.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அரசு மருத்துவமனை வளாகத்தில் சுற்றிச் திரிந்த 2 வயது பெண் குழந்தையை பொதுமக்கள் காவலர்களிடம் ஒப்படைத்தனர். பொன்மேனி புதூரைச் சேர்ந்த குழந்தையின் தாய் லதாவை கண்டுபிடித்து காவலர்கள் | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழந்தையை ஒப்படைத்தனர். | | |
| 162. | 15.1.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அடுத்த கோடியக்கரையில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் ராமகிருஷ்ணன், நாராயணன், ரத்தினசாமி ஆகிய 3 மீனவர்களை காணவில்லை என புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 163. | 15.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கொட்டத்துறை கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் மனைவி சியாமளாதேவி(27) குழந்தைகள் சுபாஷ்(5) சுவாதி (6). கணவன் மனைவித் தகராறில் மனமுடைந்த சியாமளாதேவி இரு குழந்தைகளையும் கிணற்றில் போட்டு தானும் விழுந்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 164. | 17.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் தபால் பிரிவு கண்காணிப்பாளராக வேலை பார்த்த சுப்புரத்தினம்(52) அவரது நண்பர் செல்வகுமார்(34) இருவரும் செக்போஸ்ட் அருகே வரும் வாகனங்களை வழிமறித்து காவலர்கள் போல் நடித்து மாமூல் வசூலித்தனர். மாமூல் வசூலித்த இருவரும் லஞ்ச ஒழிப்பு காவலர்களால் கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 165. | 17.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை நரிமேட்டைச் சேர்ந்த முத்துக்குமார் மனைவி அங்காளஈஸ்வரி(23). திருமணம் நடந்து 5 மாதங்களே ஆன நிலையில் அங்காளஈஸ்வரியை காணவில்லை என முத்துக்குமார் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 166. | 17.1.2011 | **கரூர் மாவட்டம்:** கரூர் பேருந்து நிலையம் சுத்தம்செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 25 துப்புரவுப் பணியாளர்கள் பணி செய்தனர். இந்தப் பணியாளர்கள் 10 பேர் வேலையில் இருந்து நிறுத்தப்பட்டனர். தட்டிக்கேட்ட 15 துப்புரவு பணியாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டது. கரூர் நகராட்சி | தொழிலாளர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆணையரின் விரோதப்போக்கைக் கண்டித்து தொழிலாளர்கள் மற்றும் சிஐடியு சார்பில் போராட்டம். | | |
| 167. | 17.1.2011 | **நெல்லை மாவட்டம்:** சென்னை சோழாவரம் லட்சுமியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த வினோத்குமார்(20) அதே பகுதியைச் சேர்ந்த லெட்சுமி(17) இருவரும் காதலித்தனர். காவலர்களால் கைதுசெய்யப்பட்டு வேனில் சென்ற வினோத்குமார் தப்ப முயன்றபோது வேனில் அடிபட்டு மரணம். 3 காவலர்கள் பணிநீக்கம். | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 168. | 17.1.2011 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல் கொல்லிமலையில் உள்ள வல்வில் ஓரி அரசு ஜிடிஆர் பழங்குடியின மாணவர் உண்டு உறைவிடப்பள்ளியில் 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்கள் வகுப்பை புறக்கணித்து போராட்டம். | வகுப்பறை வன்முறை | ஜனசக்தி |
| 169. | 17.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை தாமிரபரணி ஆற்றில் ஐகோர்ட் தடையை மீறி மணல் கொள்ளை நடைபெறுவதாக பொதுமக்கள் புகார். | மணல் கொள்ளை | ஜனசக்தி |
| 170. | 17.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் பார்வதிபுரம் அருகே கட்டயன்விளை, பஞ்ச பாண்டவர் கோவில் தெரு ஜர்ச்சில் வழிபாடு செய்வதில் இரு பிரிவினர்களுக்கிடையே மோதல். காவலர்கள் குவிப்பு. ஆர்.டி.ஓ விசாரணை. | மோதல் | தினத்தந்தி |
| 171. | 17.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** அஞ்சுகிராமம் அருகே மையிலாடி காமராஜர் பிரிவைச் சேர்ந்த ரவி மனைவி சகாய அனிதா(22). மனைவியின் நடத்தையில் சந்தேகமடைந்த ரவி அனிதாவை கழுத்தை நெறித்துக் கொலை செய்ய முயன்றதாக ரவி மீது அனிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினத்தந்தி |
| 172. | 17.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** | பெண்கள் மீதான | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மார்த்தாண்டம் அருகே பழுகலையைச் சேர்ந்த சியாமளா(48) சுங்கான் கடை திருவள்ளூவர் தெருவில் உள்ள வாடகை வீட்டில் குடியிருந்தார். சியாமளா வீட்டில் மர்மமான முறையில் தீக்குளித்துத் தற்கொலை. | வன்முறை & தற்கொலை | |
| 173. | 18.1.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூரில் திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஸ்ரீ வெங்கேடஸ்வரா மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர் சினுவின் பைக் ‘இண்டிகேட்டரை’ யாரோ உடைத்தனர் ஆனால் மாணவர்கள் உடைத்தாக ஒரு மாணவனை தனி அறையில் அடைத்து ஆசிரியர் துன்புறுத்தியதோடு அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர்களை இரண்டு கைகளையும் மேலே தூக்கி கால் வலிக்க முட்டிபோட வைத்து துன்புறுத்துவதாக ஆசிரியர் மீது மாணவர்கள் கலெக்டரிடம் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட மாணவர்கள் புகார். | வகுப்பறை வன்முறை | ரிப்போர்ட் |
| 174. | 18.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** அரூர் வட்டம், கொண்டிம்பட்டி கிராமம், இராமலிங்கம் மகள் சூர்யா(17) 9ம் வகுப்பு மாணவி. பக்கத்து வீட்டில் வசிக்கும் ஒருவர் மாணவியை ஏமாற்றி பாலியல் பலாத்காரம். மாணவி சூர்யா 7மாத கர்ப்பம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | செந்தில்ராஜா |
| 175. | 18.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு வட்டம், மகேந்திரமங்களம், காவல் எல்லைக்குட்பட்ட வெள்ளி சந்தை கிராமத்தில் இரு சமூகத்தினரிடையே அடிதடி. காயமடைந்தவர்கள் அரசு மருத்துவமனையில் அனுமதி. | மோதல் | செந்தில்ராஜா |
| 176. | 18.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி இறைச்சகுளம், செல்லையா மகள் ராதா குடும்பத் தகராறில் தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 177. | 18.1.2011 | **நாகை மாவட்டம்:** தரங்கம்பாடி வட்டம், இருக்காட்டன்சேரி கிராமத்தில் பொங்கல் விளையாட்டு விழாவில் ஆதிக்கச் சாதியினருக்கும் தலித் சமூகத்தினருக்கும் மோதல். | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 178. | 18.1.2011 | **தஞ்சை மாவட்டம்:** திருவையாறு வட்டம், பூதலூரில் வசிக்கும் தலித் குடும்பத்தினரது நிலத்தை ஆதிக்கச் சாதியினர் கேட்டு சித்திரவதை செய்வதாக பாதிக்கப்பட்ட தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 179. | 18.1.2011 | **திருவாரூர் மாவட்டம்:** திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை விடுதலைச் சிறுத்தை கட்சியினருக்கும், கள்ளர் இனத்தினருக்கும் பொங்கல் விளையாட்டு விழாவில் மோதல். | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 180. | 18.1.2011 | **தேனி மாவட்டம்:** தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பழ வியாபரி பசுபதி. பசுபதி மற்றும் ஐந்துபேரை காவலர் மகேந்திரன் அந்த இடத்தை காலி செய்யுமாறு அவதூறான வார்த்தைகளால் பேசி அடித்து துன்புறுத்தியதாக பாதிக்கப்பட்டவர்கள் காவலர் மகேந்திரன் மீது புகார். | காவல் நிலையச் சித்திரவதை | Primary |
| 181. | 18.1.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி CHRM தாலுகா அமைப்பாளர் ராமதாஸ். மாநகராட்சியின் 22 வது வர்டில் உள்ள ரேசன் கடையில் முறைகேடு நடந்தை தட்டிக் கேட்டதால் ராமதாசுக்கு கடை ஊழியர்கள் கொலை மிரட்டல். இது குறித்து உயர் அதிகரிகளுக்கு ராமதாஸ் புகார். | கொலை மிரட்டல் | Primary |
| 182. | 18.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவையை அடுத்த சோமனூர் ரோட்டைச் சேர்ந்த முருகேசன் மனைவி தமிழ்செல்வி(27) குழந்தை வான்மதி(2). தமிழ்செல்வி மற்றும் குழந்தையை காணவில்லை என முருகேசன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 183. | 18.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை பேரூர் கரடிமடையைச் சேர்ந்த | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொன்னுசாமி மனைவி ரங்கநாயகி(50). ரங்கநாயகி விஷம் குடித்துத் தற்கொலை. | | |
| 184. | 18.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அவனியாபுரம் அருகே பெருங்குடி பிரேம் நகரைச் சேர்ந்த வள்ளிமயில்(76). வீட்டில் தனியாக இருந்த வள்ளிமயிலை அதே பகுதியைச் சேர்ந்த ஐ.டி.ஐ மாணவன் அருண்(18) நகைக்கு ஆசைப்பட்டு கொன்றதாக கைது. கொலைக்கு உடந்தையாக இருந்த தாய் முத்துநாச்சியார்(44) கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 185. | 18.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வண்டியூரைச் சேர்ந்த முத்துலெட்சுமி(23) உளுந்தூர்பேட்டை சிறப்பு பட்டாலியனில் காவலராக உள்ளார். பொங்கல் பண்டிகைக்கு வீட்டிற்கு வந்த முத்துலெட்சுமி விஷம் குடித்துத் தற்கொலை முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 186. | 18.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அலங்காநல்லூரில் நடந்த ஜல்லிக்கட்டில் காளைகள் முட்டியதில் 76 பேர் காயம். 15 பேர் தீவிர சிகிச்சை. மாடு உரிமையாளர், மாடுபிடி வீரர்கள் இடையே ஏற்பட்ட மோதலில் கல் வீசப்பட்டது. போலீஸ் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 187. | 18.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கொட்டாம்பட்டி அருகே சாலை ஓரத்தில் நடந்துச் சென்றவர்கள் மீது கார் மோதியதில் 4 பேர் மரணம். மோதிய காரை எரித்ததாக செந்தில்குமார்(25), சீனிப்பண்டி(22), செல்வம்(27) 3 பேர் கைது. இது தொடர்பான விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் சாலைமறியல். சாலைமறியலில் ஈடுபட்ட 600 பேர் மீது காவலர்கள் வழக்கு பதிவு. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 188. | 18.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் மேல்நிலைப்பள்ளி எஸ்.சி எஸ்.டி மாணவர்களுக்கு | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் வழங்கப்படும் கல்வி உதவித்தொகையை மாணவர்களுக்கு வழங்காமல் முறைகேடு செய்த தலைமை ஆசிரியர், உட்பட 3 பேர் மீது வழக்கு. | | |
| 189. | 18.1.2011 | **கோவை மாவட்டம்:** ஆனைகட்டி அருகே மன்னார்க்காடு சோலையூர் கிராமத்தில் வசிக்கும் வெள்ளியங்கிரி மகள் திலகமணி(15). பத்தாம் வகுப்பு படிக்கும் திலகமணியை அதே பகுதியைச் சேர்ந்த முருகேசன் பாலியல் பலாத்காரம் செய்து கொலை. முருகேசன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & கொலை | தினகரன் |
| 190. | 18.1.2011 | **சிவங்கை மாவட்டம்:** சிவகங்கை திருப்புவனம் அருகே கொத்தங்குளத்தைச் சேர்ந்த நடராஜன்(70) மனைவி பொன்னுவேலு(65). 3மகன்கள், 3 மகள்கள் உள்ள நிலையில் பிள்ளைகள் கவனிக்காததால் மனமுடைந்த தம்பதியினர் விஷம் குடித்துத் தற்கொலை. | முதியவர்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 191. | 18.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேற்கு ஒன்றியம் வைரவநத்தம் ஊராட்சியில் கழிவு நீர் செல்ல வசதியில்லாததால் தொற்றுநோய் பரவி கிராம மக்கள் பலர் வயிற்றுப் போக்கால் பாதிக்கப்பட்டதாக பொதுமக்கள் புகார். | சுகாதாரக்கேடு | தீக்கதிர் |
| 192. | 18.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையி பெற்றோல் விலை உயர்வுக்கு எதிராக அமைதியான முறையில் போராட்டம் நடத்திய வாலிபர் சங்க தோழர்கள் மீது காவல்துறை தடியடி. காவல்துறை நடத்திய தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து மாநிலம் முழுவதும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் கண்டனம் ஆர்ப்பாட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 193. | 18.1.2011 | **சேலம் மாவட்டம்:** சேலத்தில் பெட்ரோல் விலை உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது காவல்துறை | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தடியடி. தாக்குதலில் ஈடுபட்ட காவல்துறையை கண்டித்து மறியலில் ஈடுபட்ட 46 பேரை காவலர்கள் கைது செய்தனர். | | |
| 194. | 19.1.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் கீழுபுத்துப்பட்டு கிழக்கு கடற்கரை சாலை ரைஸ் மில் பகுதியைச் சேர்ந்த வீரப்பன்(50) மீது பைக் மோதியதில் காயமடைந்த வீரப்பன் ஜீப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் முழுமையான சிகிச்சை அளிக்காததால் வீரப்பன் இறந்ததாக உறவினர்கள் மருத்துவமனையைப் பூட்டி போராட்டம். | தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | தினகரன் |
| 195. | 19.1.2011 | **சென்னை மாவட்டம்:** தண்டையார்பேட்டையைச் சேர்ந்த கணேசன் லோடு ஆட்டோவில் சரக்குகளை ஏற்றிச் சென்றபோது பணியில் இருந்த போக்குவரத்து எஸ்.ஐ. வீரபாலன் ரூபாய் 500 லஞ்சம் கேட்டதாக வீரபாலன் மனு. விசாரணையில் லஞ்சம் கேட்டதாக எஸ்.ஐ. மீது குற்றம் உறுதிசெய்யப்பட்டது. எஸ்.ஐ. வீரபாலன் ரூ.60 ஆயிரம் கணேசனுக்கு வழங்க வேண்டும் என நீதிபதிகள் உத்தரவு. | லஞ்சம் | தினகரன் |
| 196. | 19.1.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** பள்ளிப்பட்டு சானூர் கிராமத்தைச் சேர்ந்த தேவகி(23). தேவகியை அதே பகுதியைச் சேர்ந்த சரவணன்(26) சாமுவேல்(24) முரளி(23) கேலி செய்ததை தேவகியின் உறவினர் ஸ்ரீதர்(22) மதி(23) தட்டிக்கேட்டனர். தட்டிக்கேட்ட ஸ்ரீதர், மதியை இளைஞர்களை மூவரும் தாக்கியதாக தேவகி புகார். கேலி செய்த சரவணன், சாமுவேல், முரளி மூவரும் கைது. | பெண்கள் மீதான வன்முறை & ஈவ்டீசிங் | தினகரன் |
| 197. | 19.1.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** மதுராந்தகம் அருகேயுள்ள மேலவலம்பேட்டையைச் சேர்ந்த மணி மகள் தீபா அரசு பள்ளியில் | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பத்தம் வகுப்பு படித்தார். தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததால் ஆசிரியை கண்டித்தார். மனமுடைந்த தீபா தீக்குளித்துத் தற்கொலை. | | |
| 198. | 19.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி கல்லல் அருகே குரண்டி தமிழர்தெருவைச் சேர்ந்த சூரிகாந்தி(37) மனைவி வளர்மதி(30). குழந்தைகள் காயத்ரி(6) தாரணி(3). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சூரியகாந்தி மனைவி மற்றும் குழந்தைகளை அரிவாளால் வெட்டிக் கொலை செய்ததாக சூரியகாந்தி கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 199. | 19.1.2011 | **நாகர்கோவில் மாவட்டம்:** நாகர்கோவில் திருவனந்தபுரம் ரயில் பாதையில் பேயன்குழி அருகே, பிறந்த சில மணிநேரமே ஆன ஆண் குழந்தை தண்டவாளத்தில் கிடந்ததாக பொதுமக்கள் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 200. | 19.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை காரைக்குடி வட்டம், கண்ணாதாசன் நகர் முருகேசன் மனைவி விசாலாட்சி. கணவனின் தம்பி கிருஷ்ணமூர்த்தி விசாலாட்சியை அடித்துக் கொலை செய்ததாக கிருஷ்ணமூர்த்தி கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | O. ஆனந்தகுமார் |
| 201. | 19.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் பரமக்குடி வட்டம், பார்திபநல்லூர், மேலப் பெருங்கரை காலனியைச் சேர்ந்த சாத்தான் மனைவி ராஜேஸ்வரி(25). ராஜேஸ்ரிக்கும் பக்கத்து வீட்டில் வசிக்கும் காளிமுத்துக்கும் ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த காளிமுத்து ராஜேஸ்வரி மண்டையை உடைத்ததாக காளிமுத்து மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | O. ஆனந்தகுமார் |
| 202. | 19.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** களிங்கராஜபுரத்தில் நித்திரயுளையில் காவலர்களை கண்டித்து அனைத்து கட்சி சார்பாக பொதுக்கூட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | S. கணேசன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொதுக்கூட்டம் நடத்தியதில் 20 நபர் மேல் காவலர்கள் பொய் வழக்கு. | | |
| 203. | 19.1.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருபேற்றியூரைச் சேர்ந்த பவானி. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் பவானி மரணம். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | பாஸ்கர் |
| 204. | 19.1.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் எண்ணூர்அன்னை சிவசாமி நகர், திருமதி. ஜெயந்தி மீது குடும்ப வன்முறை சித்ரவதை சம்பவம். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 205. | 19.1.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் பர்மா காலனியைச் சேர்ந்த பிலு. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக பிலு புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 206. | 19.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் வில்பட்டி பேத்துப்பாறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் ஆசிரியர் ரெஜினா மேரி விடுப்பில் உள்ளார். தலைமையாசிரியர் மகாலெட்சுமி மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் உள்ளதால் பொங்கள் விடுமுறை முடிந்தும் பள்ளிக்கு வந்த மாணவர்கள் வகுப்பறைகள் பூட்டியிருப்பதால் மாணவர்களின் படிப்பு தடைபடுவதாக மாணவர்களின் பெற்றோர் பள்ளி மீது புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 207. | 19.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் பாண்டியன் அரிசி ஆலையில் மாவட்ட அலுவலர் ராஜேஸ்வரி, மற்றும் பறக்கும் படை தனி தாசில்தார் சந்தன மாரியப்பன் சோதனையின் போது பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2600 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல். உரிமையாளர் பாண்டியன்(50) கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினமலர் |
| 208. | 19.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி, குமாரசாமிப்பேட்டை திரு.வி.க., தெருவில் வசிக்கும் கிருஷ்ணன் | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகள் வினோதினி(18) ஈரோட்டில் தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார்.. வீட்டில் தனியாக இருந்த வினோதினியை கட்டிப்போட்டு மர்ம நபர்கள் 30 பவுன் நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்து சென்றதாக புகார். | | |
| 209. | 19.1.2011 | **சென்னை மாவட்டம்:** பெட்ரோல் விலை உயர்வுக்கு கண்டனம் தெரிவித்து சென்னை நுங்கம்பாக்கத்தில் இந்தியன் ஆயில் பவன் வளாகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் (டி.ஒய்.எஃப்.ஐ.) மீது காவலர்கள் தடியடி. 52 பேர் கைது. | காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 210. | 19.1.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் கணபதிநகர் 4 வது தெருவில் ஒரு வீட்டில் பதுக்கி வைத்திருந்த 180 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். வீட்டின் உரிமையாளர் ஜெயராமன் மேல் வழக்கு பதிவு. | ரேசன் அரிசி கடத்தல் | தினமணி |
| 211. | 19.1.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே உள்ள கே. மகாலிங்புரம் கிராமத்தில் ரேசன் கடையில் நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்ட ரேசன் அரிசியில் யூரியா உரம் கலந்திருந்ததால் பொதுமக்கள் சாலை மறியல். | ரேசன் அரிசியில் யூரியா கலப்படம் | தினமணி |
| 212. | 19.1.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகே பெரியாறு கால்வாயில் ஆண்குழந்தை பிணம் கிடந்ததாக பொதுமக்கள் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 213. | 19.1.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் ஆத்தூர் அருகே நடந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் நடந்த கலவரத்தில் போலீஸ் தடியடி. 30 பேர் கைது. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 214. | 19.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பசுமலை விநாயகர் தெருவில் வசித்து வரும் செல்லம்மாள்(63) மகன்கள் செல்லப்பாண்டி, | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிவன்சக்தி. தம்பி வீட்டில் இருந்த தாய்க்கு தம்பி அவருடைய மனைவியும் சரியாக சாப்பாடு போடாமல் துன்புறுத்தியதால் தாய் மரணமடைந்ததாகவும், தனது தாய் மரணத்தில் தம்பி மீது சந்தேகப்படுவதாகவும் செல்லப்பாண்டி ஐகோர்ட்கிளையில் மனு தாக்கல். | | |
| 215. | 20.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை பேட்டை மக்தூம்ஞானியார் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த மீரான் மகன் அஸ்ரப்(3) தனியார் பள்ளியில் பிரீகேஜி படித்து வருகிறான். பாத்திமா தனது குழந்தையை பள்ளியில் விட்டு வந்த சிறிது நேரத்தில் அஸ்ரப் பையுடன் நடந்து வந்தான். பாத்திமா பள்ளி நிர்வாகத்திடம் வகுப்பறைக்குச் சென்று குழந்தை எப்படி வெளியேறினான் என கேட்டதில் பள்ளி நிர்வாகம் சரியான பதில் சொல்லாததால் ஆத்திரமடைந்த பாத்திமா மற்றும் உறவினர்கள் சாலை மறியல். | வகுப்பறை வன்முறை | S. கணேசன் தினகரன் (4.1.11) |
| 216. | 20.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை அருகேயுள்ள முன்னீர்பள்ளத்தைச் சேர்ந்த முருகன், சங்கரசுப்பு இருவரும் 2 நாட்களுக்கு முன் இறந்தனர். சங்கரசுப்பு உடல் தகனம் செய்யப்பட்டது. முருகன் உடலை மயானத்திற்கு கொண்டு செல்லும் வழியில் முட்களை வெட்டி சங்கரசுப்பு தரப்பினர் பாதையை அடைத்ததாக இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதல். | தலித்துகள் மீதான வன்முறை | S. கணேசன் தினகரன் (5.1.11) |
| 217. | 20.1.2011 | **நெல்லை மாவட்டம்:** தூத்துக்குடி அருகே ஒட்டப்பிடாரம் ஒன்றியம் காயலூரணி கிராமத்தைச் சேர்ந்த ராமசுப்பு மகள் ரூபிகா(19). பி.காம் இரண்டாம் ஆண்டு மாணவியை மாடசாமி பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்தாக மாடசாமி கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | S. கணேசன் தினகரன் (6.1.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| 218. | 20.1.2011 | **நெல்லை மாவட்டம்:** திசையன்விளை அருகே விஜயஅச்சம்பட்டில் கிராமத்தில் இருபிரிவினரிடையே ஏற்பட்ட மோதலில் காவலர்கள் ஒருதலைப்பட்சமாக நடப்பதாக குற்றம்சாட்டி ஒரு பிரிவைச் சேர்ந்த 700 குடும்பத்தினர் குளத்தில் குடியேறி போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | S. கணேசன் தினகரன் (6.1.11) |
| 219. | 20.1.2011 | **நெல்லை மாவட்டம்:** குளத்தூர் அருகே உள்ள குளத்தூர் காலனியைச் சேர்ந்த மாரிமுத்து மகள் மாலதி(9) சாயர்புரத்தை அடுத்த நடுவக்குறிச்சி சிறுவர் இல்லத்தில் தங்கி அங்குள்ள பள்ளியில் 4–ம் வகுப்பு படித்து வந்தார். மாலதி திடீரென வாந்தி எடுத்தார். மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் மாலதி மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | S. கணேசன் தினகரன் (7.1.11) |
| 220. | 20.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் பாம்பூரைச் சேர்ந்த சுரேஷ்(40). இவரிடம் கொத்தடிமையாக செம்மறி ஆடுகளை மேய்க்கும் தொழில் செய்த சிறுவர்கள் மெடிசன், பாலச்சந்திரன் இருவரும் மீட்கப்பட்டனர். இவர்களது பெற்றோர் சுரேசிடம் ரூபாய் 10,000 வாங்கி குழந்தைகளை விற்றதாக புகார். | கொத்தடிமை | S. கணேசன் தினகரன் (9.1.11) |
| 221. | 20.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை வீ.கே.புதூர் அருகே உள்ள வீராணத்தைச் சேர்ந்த பீர்முகமது மனைவி ருகையாள்பீவி(32) முதுகுதண்டுவடத்தில் ஏற்பட்ட வலி காரணமாக ருகையான்பீவி வண்ணார்பேட்டை தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நடந்தது. அறுவைசிகிச்சையில் ருகையாள்பீவி மரணம். டாக்டர்களின் தவறான சிகிச்சையால் ருகையாபீவி இறந்ததாக உறவினர்கள் மருத்துவமனையை முற்றுகையிட்டனர். | பெண்கள் மீதான வன்முறை & மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | எஸ். கணேசன் தினகரன் (10.1.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| 222. | 20.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கொட்டில்பாடு மீனவர் கிராமத்தில் கடந்த ஒரு வருடமாக கோஷ்டி மோதல். இதற்கு காவல்துறை அதிகாரிகளும் உடந்தையாக செயல்படுவதாகவும் எனவே குளச்சல் காவல் நிலைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என லெனினிஸ்ட் கட்சி சார்பில் கலெக்டரிம் மனு. | காவல் நிலையச் சித்திரவதை | எஸ். கணேசன் தினகரன் (10.1.11) |
| 223. | 20.1.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சியைச் சேர்ந்த திரு. ராமதாஸ் என்பவரை பள்ளப்பேரி காவல் நிலைய ஆய்வாளர் அடித்துச் சித்திரவதை செய்ததாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை | பிரபாகர் |
| 224. | 20.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை காளையாபர்கோவில் முத்துக்குமார் மனைவி சரண்யா(23) கணவன் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த சரண்யா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | O. ஆனந்தகுமார் |
| 225. | 20.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் ஆத்தூர் வட்டம், ஏ.கூட்டம்பட்டியைச் சேர்ந்த பாப்பம்மாள் மற்றும் உறவினர்கள் கடந்த 15.1.11 அன்ற மாலை சுமார் 5 மணி அளவில் சார்பு ஆய்வாளர் வையாபுரி மற்றும் அவரது வையாராக்கள் லஞ்சம் கேட்டு அடித்துச் சித்திரவதை செய்ததாக செம்பட்டி காவல் நிலையத்தரில் புகார் கொடுக்கச் சென்ற பாப்பம்மாளின் மகன் சிவமணியை மேற்படி காவல் நிலையத்தில் காவலர்கள் அடித்து சித்திரவதை செய்ததாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை | சதீஸ் |
| 226. | 20.1.2011 | **தேனி மாவட்டம்:** தேனி அருகே கொடுவிலார்பட்டியைச் சேர்ந்த விஜயராயன்(28) மனைவி ரம்யா(23) குழந்தை தீபக்கிஷோர் (ஒன்பது மாதம்). ரம்யா மற்றும் குழந்தை இருவரும் கருகிய | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையில் நிர்வாணமாக கிடந்ததாக புகார். | | |
| 227. | 20.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஆறாவது சிறப்பு பட்டாலியன்படை போலீஸ் ஸ்டோரில் ரூ.5.45லட்சம் சுருட்டியதாக, இரண்டு ஆண்டுகளுக்கு தபின், எஸ்.ஐ., மோகன்குமார், ஏட்டு விஜயகுமார் மீது மத்திய குற்றப்பிரிவு போலீசார் 4 பிரிவுகளில் வழக்குப் பதிவு. | ஊழல் | தினமலர் |
| 228. | 20.1.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் சங்கராபுரம் அரசு போக்குவரத்துக் கழக பேருந்தில் கேட்பாரற்று கிடந்த 'டிராவல் பேக்கில்' இளம் பெண் தலை மற்றும் ஒரு வயது பெண் குழந்தை உடல் கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & சிசுக் கொலை | தினமலர் |
| 229. | 20.1.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் தாலுகா குன்னன்பட்டியைச் சேர்ந்த ஈஸ்வரன்(50) அதே பகுதியைச் சேர்ந்த இளையசாமி இருவருக்கும் நிலத்தகராறு. கோர்ட்டில் வழக்கு விசாரணை. கோர்ட்டு மூலம் நியமிக்கப்பட்ட குழுவினர் நிலத்தை பார்க்க சென்றபோது இளையசாமி மற்றும் குடும்பத்தினர் கற்களை வீசி எறிந்ததில் ஈஸ்வரன் மகள் மீது கல் பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக ஈஸ்வரன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 230. | 20.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** கிருஷ்ணகிரி போச்சம்பள்ளி அருகே பாட்டி வீட்டில்தங்கி 9ம்வகுப்பு படிக்கும் மாணவி ஜெயா. அதே பகுதியைச் சேர்ந்த செல்வம்(40) மாணவி ஜெயாவை பாலியல் பலாத்காரம். மாணவி ஜெயாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 231. | 20.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் குஜிலியம்பாறை அருகே தாதாநாயக்கனூர் அருகே உள்ள துவக்கப்பள்ளியில் மாணவ, மாணவியர்களை தலைமையாசிரியர் செல்வராஜன் செருப்புகளைத் துடைக்கவும், கை, | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கால்களை அமுக்கிவிடவும் வற்புறுத்தியதாக மாணவ, மாணவிகள் தலைமையாசிரியர் மீது புகார். | | |
| 232. | 20.1.2011 | **நாகை மாவட்டம்:** நாகை ஆறுகாட்டுத்துறையை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்ததாக தமிழக மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | ஜனசக்தி |
| 233. | 21.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் பாம்பன் தோப்புக்காடையைச் சேர்ந்த மீனவர்கள் முகேஸ்குமார், கருப்பையா 2 பேரையும் வனத்துறை காவல்துறையினர் குடிபோதையில் அடித்து சித்திரவதை செய்ததாக மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை & காவல் நிலையைச் சித்திரவதை | ஆனந்தகுமார் |
| 234. | 21.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை மானாமதுரை வட்டம், சிப்காட் கண்ணன் மகள் சரண்யா(14). அரசு மேல் நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் சரண்யாவை நவத்தாவு கிராமத்தைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் சுரேஸ் பாலியல் பாலத்காரம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | ஆனந்தகுமார் |
| 235. | 21.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஸ்வரம் மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்தபோது இலங்கை கடற்படையினர் மீனை பிடுங்கி கொண்டு இந்திய மீனவர்களை அடித்து விரட்டித்ததாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | ஆனந்தகுமார் |
| 236. | 21.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி பூதப்பாண்டி, எட்டாமடை பகுதியைச் சேர்ந்த ஜெனிபர் கில்பர்ட் மனைவி பெல்குயில் ஜீவிதா(28). ரூபன், ஜெஸ்டின் இருவரும் தொலைபேசியில் ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாக ஜீவிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | அய்யப்பன் தினகரன் |
| 237. | 21.1.2011 | **சேலம் மாவட்டம்:** | பெண்கள் மீதான | ------ |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சலசண்டாபுரம் ஆடத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த சௌரியூர் சோலைபுரம் கணேசன் மகள் வித்யா(20). வித்யாவுக்கு பிரசவவலி ஏற்பட்டதால் சலசண்டாபுரத்தில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாமல் செவிலியர் பிரசவம் பார்த்ததில் குழந்தையுடன் வித்யா மரணம். | வன்முறை & மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | |
| 238. | 21.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பழங்காநத்தம் பகுதியைச் சேர்ந்த ராஜசேகரன் மனைவி பிரீத்தா கிறிஸ்டியனாள். கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த கிறிஸ்டியனாள் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 239. | 21.1.2011 | **திருவாரூர் மாவட்டம்:** திருவாரூர் மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ஜெ.நாவலன் மரணம். கட்சி தலைவருக்கு அஞ்சலி செலுத்த வந்த கூட்டத்தினரை காவல்துறை தடியடி மூலமும், ரப்பர் குண்டுகளை வீசியும் கலைத்தனர். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 240. | 21.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஒத்தக்கடை அருகே புதுதாமரைபட்டியைச் சேர்ந்த பிரபாகரன் மகன் அமர்நாத்(11) சக மாணவர் ரிஷி(11) விளையாடிக் கொண்டிருந்த இருவரையும். கருப்பு, சத்யராஜ் என்ற 2 நபர்கள் கடத்திச் சென்ற போது சிறுவர்கள் உறவினர்களால் மீட்கப்பட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 241. | 21.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் அருகே ஆவிச்சிப்பட்டி பகுதியைச் சேர்ந்த நாககிருஷ்ணன் மனைவி சசிகலா(35). வீடு கட்ட கட்டிட வரைபட அனுமதி கேட்டு சீலப்பாடி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் சகிகலா மனு கொடுத்தார். வரைபட அனுமதி வழங்க எழுத்தர் பாலதண்டபாணி ரூ. 5 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக சசிகலா புகார். | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 242. | 21.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் வட்டாட்சியர் குழுவினர் அல்லம்பட்டி பகுதியில் அத்தியாவசிய பொருட்கள் கடத்தல் தடுப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது பாண்டியராஜன் என்பவருக்கு சொந்தமான அரவை மில்லில் பதுக்கி வைக்கிப்பட்டிருந்த ரேசன் அரிசி 55 மூட்டைகள் பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 243. | 21.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் பாம்பன் அருகே சின்னப்பாலம், தோப்புக்காடு கிராமத்தில் உள்ள மீனவர்கள் பாம்பன் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற போது மீனவர்கள் மீது தமிழக வனத்துறையினர் தாக்குதல் நடத்தியதாக மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 244. | 21.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த கடகத்துரைச் சேர்ந்த முருகன்(42) மனைவி கவுரம்மாள்(38). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் பணம் கேட்டு துன்புறுத்தியதாக கவுரம்மாள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா<br>காலைக்கதிர்<br>(6.1.11) |
| 245. | 21.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஊத்தங்கரை அருகேயுள்ள கல்லாவியைச் சேர்ந்த முருகன் மனைவி மகாலெட்சுமி(22). முருகனுக்கும் நல்லவன்பட்டியைச் சேர்ந்த தரணி இருவருக்கும் கள்ளக்காதல். தரணி மற்றும் முருகன் இருவரும் சேர்ந்து மகாலெட்சுமியைச் துன்புறுத்தியதாக முருகன் மீது மகாலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா<br>தினத்தந்தி<br>(7.1.11) |
| 246. | 21.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** ஓசூர் அடுத்த திப்பாளத்தைச் சேர்ந்த பாப்பண்ணா மகள் காயத்திரி(17). வீட்டில் இருந்த காயத்திரி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா<br>காலைக்கதிர்<br>(7.1.11) |
| 247. | 21.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** சூளகிரி மத்திகிரி டெடிகரஅள்ளியைச் சேர்ந்த பழனிசாமி மனைவி கவுரி(21). அவர் பிரவசத்திற்காக கவுரி எஸ்.முதுகானப்பள்ளி அரசு | மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | செந்தில்ராஜா<br>தினத்தந்தி<br>(5.1.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்க்கப்பட்டார். மருத்துவர்களின் அலட்சிய போக்கால் பிரசவத்தில் குழந்தை இறந்ததாக கவுரியின் உறவினர்கள் மருத்துவமனை முற்றுகை போராட்டம். | | |
| 248. | 21.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** ஓசூர் காந்தி நகரைச் சேர்ந்த வெங்கடாசலம் மனைவி வளர்மதி(35). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த வளர்மதி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா தினத்தந்தி (8.1.11) |
| 249. | 21.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பென்னாகரம் பிக்கிலிகொள்ளப்பட்டியைச் சேர்ந்த மாதேஷ் மனைவி பழனியம்மாள்(25). பழனியம்மாள் கிணற்றில் விழுந்துத் தற்கொலை. கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதால் பழனியம்மாள் தற்கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா காலைக்கதிர் (7.1.11) |
| 250. | 21.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தொப்பூரை அடுத்த ஈசல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த முருகன் மனைவி கற்பகம்(26). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த கற்பகம் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா தினத்தந்தி (7.1.11) |
| 251. | 21.1.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் அருகே நடுப்பட்டியைச் சேர்ந்த காவேரி மகன் விஜயராகவன் தனது பட்டா பெயர் மாற்றம் செய்ய வி.ஏ.ஓ. வெங்கடேசனை அணுகினார். அவர் ருபாய் 12 ஆயிரம் லஞ்சம் கேட்டு 6 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக விஜயராகவன் புகார். வெங்கடேசன் கைது. | லஞ்சம் | செந்தில்ராஜா காலைக்கதிர் (14.1.11) |
| 252. | 22.1.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி அருகே அகத்திஸ்வரம் வட்டம், வன்னவிளை பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் மனைவி கவிதா. கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த வனிதா தூக்குப்போட்டு தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | ஐய்யப்பன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 253. | 22.1.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி அடுத்த ஆகாரம் கிராமத்தைச் சேர்ந்த சிறுமி மாலதி(13). ஆடு மேய்க்க சென்ற மாலதியை அதே பகுதியைச் சேர்ந்த மோகன்(17 மாலதியை) பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்து கழுத்தை அறுத்து கொலை செய்ததாக மோகன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & கொலை | தினமலர் |
| 254. | 22.1.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் ஆண்டியப்பனூரைச் சோர்ந்த சந்தீப்குமார்(35) மனைவி சுமதி(30) குழந்தைகள் கீர்த்தனா(6) சுருதி(3). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த சுமதி தனது இரு குழந்தைகளுடன் கிணற்றில் விழுந்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 255. | 22.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் அருகே கன்னிசேரிபுதூர் தியாகராஜபுரத்தில் 'ராஜூ கண்ணா பயர் ஒர்க்ஸ்' பட்டாசு ஆலைவெடி விபத்தில் சம்பவ இடத்தில் ஐந்துபேரும், மதுரை மருத்துவமனையில் 3 பேரும் மரணம். படுகாயம் அடைந்த 12 பேர் மருத்துவமனையில் சிகிச்சை. | பட்டாசு ஆலை தீ விபத்து | தினமலர் |
| 256. | 22.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஆரப்பாளையம் பகுதியைச் சேர்ந்த முத்து(51). ரேசன் அரிசியை பதுக்கி விற்பதாக உணவுக்கடத்தல் தடுப்புப் பிரிவு காவலர்களுக்கு புகார். காவலர்கள் அதிரடி சோதனையில் முத்துவிடம் இருந்து 500 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன்அரிசி கடத்தல் | தினமலர் |
| 257. | 22.1.2011 | **தேனி மாவட்டம்:** தேனி அருகே கம்பம் கூடலூரைச் சேர்ந்த ராஜா மகள் மது(14). 8ம் வகுப்பு படித்து வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த சுதாகர்(32) தனியாக வீட்டில் இருந்த மதுவை பாலியல் பலாத்காரம் செய்ததாக சுதாகர் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 258. | 22.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** | பெண்கள் மீதான | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிவகங்கை மானாமதுரை சிப்காட் பகுதியில் குடியிருக்கும் கண்ணன் மகள் அமுதா(13). பள்ளிக்கு சென்ற அமுதாவை அதே பகுதியைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் சுரேஷ்(24) முத்துச் செல்வம்(22) கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம். சுரேஷ் முத்துச்செல்வம் இருவரும் கைது. | பாலியல் வன்முறை | |
| 259. | 22.1.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் – கடலூர் அருகே கிழையூர் பிரதான சாலையின் ஒரு ஓதுக்குப்புறமாக அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்த 50 தலித் குடும்பங்கள் அரசு புறம் போக்கு நிலத்தில் 40 ஆண்டுகள் குடிசை அமைத்து வாழ்ந்து வந்தனர். பல ஆண்டுகளாக வசித்துவரும் தங்கள் நிலத்திற்கு பட்டா வழங்க வேண்டும் என தலித் மக்கள் போராட்டம். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 260. | 22.1.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் குருவராஜப்பேட்டையில் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியில் 700க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்துவருகின்றனர். 7ம் வகுப்பு மாணவியை ஆசிரியை ஒருவர், அடிக்கடி காரணமில்லாமல் அடித்ததாகவும் பெற்றோர் தட்டிக் கேட்டதால் ஆத்திரமடைந்த ஆசிரியை, வகுப்பறையில் 6 மாணவிகளை சராமாரியாக கையால் தாக்கியதில் வகுப்பறையில் மாணவிகள் மயங்கி விழுந்தனர். பள்ளி நிர்வாகம் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பெற்றோர்கள் பள்ளி முற்றுகை. | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 261. | 22.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை மருந்துக் கடைகளில் போலி மாத்திரைகள் நடமாட்டம் இருப்பதாக சி.பி.சி.ஐ.டி., போலீசாருக்கு தகவல். காவலர்கள் நடத்திய அதிரடி சோதனையில் மதுரவாயல் எம்.எம்.டி.ஐ காலனியில் சாமி பார்மசியைச் சேர்ந்த பெருமாள். | போலி மாத்திரை விற்பனை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாரிமுனை மஞ்சுளா பார்மசி உரிமையாளர் ரவிசேகர்(39). சேத்துபட்டில் உள்ள சத்யா பார்மசி உரிமையாளர் சத்தியநாதன்(38). தாம்பரத்தில் ஏஞ்சல் பார்மசி நடத்தி வரும் கனகராஜ், அதே பகுதி அனுமெடிக்கல் உரிமையாளர் நாகராஜன் ஆகிய 5 மருந்துக் கடை உரிமையாளர்கள் கைது. | | |
| 262. | 23.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஊத்தங்கரை அருகே உள்ள கொண்டபட்டி கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன் மகள் கனகவல்லி(21) திருவண்ணாமலை செங்கத்தில் ஒரு தனியார் கல்லூரியில் பி.ஏ., இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். கல்லூரி சென்ற மாணவி அதே பகுதியில் மாந்தோப்பில் மர்ம நபர்களால் பாலியல் பலாத்காரம் செய்ததோடு கொலை செய்யப்பட்டு நிர்வாண கோலத்தில் கிடந்ததாக பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & கொலை | மாலை மலர் |
| 263. | 23.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே பார்த்திபனூரைச் சேர்ந்த அயூப்கான் மகள் சலைஹா(16 பெயர் மாற்றம்). அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்–1 படிக்கும் சலைஹாவை அதே பகுதியைச் சேர்ந்த தர்மதுரை(17) கடத்தியதாக அயூப்கான் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 264. | 23.1.2011 | **நாகை மாவட்டம்:** கழுதி அருகே கீழமுடிமன்னார்கோட்டை பகுதியைச் சேர்ந்த சகாயராஜ் மகள் நாகஜோதி(19). கல்லூரிக்கு செல்லும் நாகஜோதியை அதே பகுதியைச் சேர்ந்த பிரான்சிஸ்(24) முத்துராஜ்(24) இருவரும் கேலி கிண்டல் செய்ததாக நாகஜோதி புகார். இளைஞர்கள் இருவரும் கைது. | பெண்கள் மீதான வன்முறை | மாலைமுரசு |
| 265. | 23.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீபெரும்புதூர் படப்பை பெரியார்நகர் பகுதியைச் சேர்ந்த அருள் மகன் ஜோஸ்(2) விளையாடிக் கொண்டிருந்த | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழந்தை மயங்கி விழுந்து மரணம். அதே பகுதியைச் சேர்ந்த முகமதுவின் மகன் ஜலால்(2). சொட்டு மருந்து கொடுத்ததால் குழந்தை இறந்ததாக பீதி. | | |
| 266. | 23.1.2011 | **நாகை மாவட்டம்:** நாகை வேதாரண்யம் அருகே உள்ள புஷ்பவனத்தைச் சேர்ந்த மீனவர் ஜெயக்குமார்(27) அவரது தம்பி செந்தில்(23) சித்தப்பா ராஜேந்திரன்(55) கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை கடலில் குதிக்கச் சொன்னதோடு ஆபாசமாக திட்டினர். செந்தில் ராஜேந்திரன் இருவரும் கடலில் குதித்தனர். நீச்சல் தெரியாததால் படகில் இருந்த ஜெயக்குமாரை இலங்கை கடற்படையினர் கயிற்றால் கழுத்தில் சுருக்கு போட்டு கொன்றுவிட்டதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் செந்தில், ராஜேந்திரன் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 267. | 24.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோமதிபுரத்தைச் சேர்ந்த பிரபாவதி மகள் சாந்தினி(15) சாந்தினியை அதே பகுதியைச் சேர்ந்த அண்ணாமலை அவரது தாய் அழகு உட்பட 3 பேர் கடத்திச் சென்றதாக பிரபாவதி புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 268. | 24.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை தியாகி குமரன் வீதியில் வசிக்கும் சுரேஷ் மனைவி சங்கீதா(27). இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். வரதட்சணைக் கேட்டு கணவர் சுரேஷ் அடித்ததோடு தோசைக்கரண்டியை அடுப்பில் வைத்து சூடாக்கி மனைவியின் மார்பில் சூடுவைத்து சித்திரவதை செய்ததாக சங்கீதா கணவர் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 269. | 24.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அருகே புதுவயல் பகுதியில் தனியார் ரைஸ் மில்லில் ரேசன் அரிசியை பாலீஷ் செய்து வெளி மார்க்கெட்டில் | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விலைக்கு விற்பதற்காக லாரியில் ஏற்றப்பட்டு தயார் நிலையில் இருந்த 200 மூட்டை ரேசன் அரிசி அதிகாரிகளால் பறிமுதல். மற்றும் மில்லில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 15 மூட்டைகள் பறிமுதல். | | |
| 270. | 24.1.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேசுவரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் ரோந்துக் கப்பலால் மீனவர்கள் படகினை இடித்துத் தள்ளியதோடு வலைகளை எடுத்துக் கொண்டு ஓடிவிடும்படி விரட்டியதாக பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 271. | 24.1.2011 | **நாகை மாவட்டம்:** நாகை கீழ்வேளூர் ஒன்றியம் சாட்டியக்குடியைச் சேர்ந்த வாலிபர் சங்கத் தோழர் ரவிச்சந்திரன்(37) எம்.ஏ.பட்டதாரி. தனது கிராமத்தில் அடிப்படை வசதி கேட்டு ரவிச்சந்திரன் சாலை மறியல். விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற காவலர்கள் ஜட்டியோடு சித்ரவதை செய்ததால் மனமுடைந்த ரவிச்சந்திரன் விஷம் குடித்துத் தற்கொலை. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 272. | 24.1.2011 | **சென்னை மாவட்டம்:** மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் பகுதியைச் சேர்ந்த ரம்யா(16) சுகந்தி(14) (பெயர் மாற்றம்) 2 சிறுமிகள் அப்பா அம்மா இறந்த காரணத்தால் சென்னை முடிச்சூரில் உறவினர் வீட்டில் தங்கியிருந்தனர். அந்த வீட்டில் உள்ளவர்கள் ஆபாச படத்தை போட்டுகாட்டி சிறுமி ரம்யாவிடம் செக்ஸ் சித்திரவதை செய்ததாகவும், மது குடிக்க வற்புறுத்தியதாகவும் மனநலம் பாதிக்கப்பட்ட ரம்யா ஹல்ப்லைனுக்கு போன் செய்து தனக்கு நேர்ந்த சித்திரவதையை கூறி பாதுகாப்பு கேட்டதாக புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 273. | 24.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** தேவகோட்டை கல்லல் அருகே சின்னநாக்சியாபுரத்தைச் சேர்ந்த மருதுபாண்டியன் மனைவி உஷா(26). உஷாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு மருதுபாண்டியன் உஷாவை கழுத்தை அறுத்து கொலை செய்ததாக உஷாவின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | மாலைமலர் |
| 274. | 24.1.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் மீனாட்சி நகரைச் சேர்ந்த ஜெயராமன் மனைவி சந்திரா(28). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ஜெயராமன் தலையனையால் அமுக்கி கொலை செய்ய முயற்சி செய்ததாக ஜெயராமன் மீது சந்திரா புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | மாலைமலர் |
| 275. | 24.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை உசிலம்பட்டி அருகே உள்ள பெருமாள்பட்டியைச் சேர்ந்த ராஜவடிவு மனைவி பூங்கா(25). அதே பகுதியைச் சேர்ந்த சிவராஜ்(21) பூங்காவை மானபங்கம் செய்ய முயன்றதாகவும் தட்டிக் கேட்ட ராஜவடிவையும் பூங்காவை தாக்கியதாக சிவராஜ் மீது பூங்கா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 276. | 25.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வக்கீல் புதுத்தெரு பகுதியில் போக்குவரத்து இன்ஸ்பெக்டராக பணிபுரியும்ர் சிவக்குமார். அங்கு வந்த 2 மணல் லாரிகளை நிறுத்தி அதிக வேகத்தில் வந்ததாகக்கூறி தலா ரூ. 500 லஞ்சம் கேட்டதாக லாரி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். | காவல் நிலையச் சித்திரவதை & லஞ்சம் | தினகரன் |
| 277. | 25.1.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் அருகே மதுராந்தகம் தச்சூல் கிராமத்தைச் சேர்ந்த தலித் இளைஞன் வேளாங்கண்ணி(38) மரணமடைந்தார். பொது கல்லறைத் தோட்டத்தில் தலித் இளைஞரை அடக்கம் செய்ய ஆதிக்கச் சாதியினர் எதிர்ப்பு. சடலத்தை புதைக்க குழி வெட்டிய தலித் சமூகத்தைச் சேர்ந்த | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இராஜேந்திரனை ஆதிக்கச் சாதியினர் கொலை செய்ததைக் கண்டித்து தீண்டாமை ஒழிப்பு முன்னணி கடும் கண்டனம். | | |
| 278. | 25.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பேரையூர் அருகே செங்கல் சூளைகளில் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக நடத்துவதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டரிடம் பொதுமக்கள் புகார். | கொத்தடிமை | தினமணி |
| 279. | 26.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலூர் அருகே முத்துவேல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் மனைவி வசந்தி(27) மகள் சபீதா(4). தீராத வயிற்றுவலியால் அவதிப்பட்ட வசந்தி குழந்தைக்கும் விஷம் கொடுத்து தானும் விஷம் அருந்தித் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமணி |
| 280. | 26.1.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி உறையூரை சேர்ந்த நாகராஜன் மகன் ராஜேஷ்கண்ணா(40). தனது வீட்டுமனையை லட்சுமி என்பவருக்கு விற்பனை செய்தார். விற்பனையை கிரைய பத்திரம் செய்வதற்காக உறையூர் சார்பதிவாளர் சசிகலா(36)வை அணுகினார். அவர் ரூபாய் 20 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக ராஜேஷ்கண்ணா புகார். சசிகலா கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 281. | 27.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வடக்கு வெளிவீதியில் உள்ள ஓட்டல் டியூக்கிற்கு கணவன் மனைவி என கூறி 2 பேர் வந்தனர். அறையில் தங்கியிருந்த 30 வயது பெண் கழுத்து நெறிப்பட்டு வாயில் விஷம் ஊற்றிய நிலையில் மரணம். உடன் வந்தவரை காவலர்கள் தேடி வருகின்றனர். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 282. | 27.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** மதுரை திருமங்கலம் பள்ளிக்கூட தெருவைச் சேர்ந்த செல்வமணி மகள் பானுப்பிரியா(24). | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திண்டுக்கல் நாகல் நகரைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் பிரபு(25) இருவரும் காதலித்தனர். பிரபு வீட்டில் பெற்றோர் திருமணத்திற்கு மறுப்பு. காதலன்வீட்டு முன்பு பானுப்பிரியா விஷம் குடித்துத் தற்கொலை முயற்சி. | | |
| 283. | 27.1.2011 | **கடலூர் மாவட்டம்:** கடலூரில் நடந்த மாவீரர் தின ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டத்தில், இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசிய தமிழர் பேரவை நிறுவனர் பாலகுரு(50) பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கல்யாணி(64) உட்பட 10 பேரை காவலர்கள் கைது செய்தனர். கைது நடவடிக்கையை கண்டித்து கடலூர் மத்திய சிறையில் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 284. | 27.1.2011 | **திருவாரூர் மாவட்டம்:** திருவாரூர் மன்னார்குடி அடுத்த கோட்டூர் ஈசானங்குடியைச் சேர்ந்த ராமையன்(62) மகன் அருண்(35) பேத்தி சந்தியா(3). குடிபோதையில் பேயை வெட்டுவதாக நினைத்து தனது மூன்று வயது பேத்தியை ராமையன் வெட்டிக் கொலை செய்ததாக கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 285. | 27.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன்சத்திரம் வட்டம், கள்ளிமந்தையம் அருகே உள்ள தேவத்தூர் வடக்குத் தெருவைச் சேர்ந்த முருகேசன் மகன் நவீன்குமார்(12). 6ம் வகுப்பு படிக்கும் நவீன்குமார் குடியரசு தின விழாவிற்கு சென்று வீடு திரும்பும்போது மர்ம நபர்கள் கடத்தமுயற்சி. சிறுவன் சத்தம் போடவே பொதுமக்கள் ஒன்றுகூடி சிறுவனை மீட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் முயற்சி | தமிழ்சுடர் |
| 286. | 27.1.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை அருகே ஒக்கூர் இலங்கைத் தமிழர் முகாமை சேர்ந்த சூசையப்பன் மனைவி ஆதம்மாள் மகள் ஜேம்ஸ் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிஷாந்தினி(22) பி.ஏ.முடித்த விட்டு தனியார் பள்ளியில் ஆசிரியர். ஆதம்மாளுக்கும் முகாமில் வசிக்கும் ராஜா மனைவி பவானிக்கும் தகராறு. இந்த தகராறில் பவானி நிஷாந்தினியை அவதூறாக பேசியதால் மனமுடைந்த நிஷாந்தினி விஷம் குடித்துத் தற்கொலை. | | |
| 287. | 27.1.2011 | **புதுச்சேரி மாவட்டம்:** புதுவை காலாப்பட்டில் உள்ள தனியாருக்கு சொந்தமான ரசாயன தொழிற்சாலை ஒன்றில் திடீரென்று அமில வாயு கசிவு ஏற்பட்டதால் 13 குழந்தைகள் பாதிக்கப்பட்டனர். 100க்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதி. | தொழிற் சாலையில் விஷ வாயு கசிவு | தினத்தந்தி |
| 288. | 27.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை எஸ்.எஸ்.காலனி பகுதியில் தனியாக சுற்றித்திரிந்த 7 வயது சிறுவனை காவலர்கள் மீட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 289. | 28.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி கம்பை நல்லூர் செங்குட்டை சமத்துவபுரத்தைச் சேர்ந்த நந்தகோபால் மனைவி சுதா(26). நந்தகோபால் மனைவி மீது சந்தேகப்பட்டதால் கணவன் மனைவி இடையே தகராறு. நந்தகோபால் மனைவி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததாக கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | செந்தில்ராஜா தினத்தந்தி (3.1.11) |
| 290. | 28.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஓசூர் அடுத்த திம்பாளத்தைச் சேர்ந்த பாப்பண்ணா மகள் காயத்திரி(17). தீராத வயிற்றுவலி காரணமாக காயத்ரி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | செந்தில்ராஜா தினத்தந்தி (5.1.11) |
| 291. | 28.1.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் ஓமலூர் அடுத்த நடுப்பட்டி பக்கமுள்ள எலத்தூரைச் சேர்ந்த விஜயராகவன். தனது நிலத்திற்கு பட்டாமாறுதலுக்கு, கிராம நிர்வாக அதிகாரி வெங்கடேசனை அணுகினார். அவர் ரூபாய் 6 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக விஜயராகவன் புகார். | லஞ்சம் | செந்தில்ராஜா காலைக்கதிர் (5.1.11) |
| 292. | 28.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** போச்சம்பள்ளி அருகேயுள்ள பாரூர் | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புங்கம்பட்டியைச் சேர்ந்த கணேசன் மனைவி ரேவதி(22). கணவன் மனைவி குடும்பத்தகராறில் மனமுடைந்த ரேவதி வீட்டில் தூக்கு போட்டுத் தற்கொலை. | & தற்கொலை | காலைக்கதிர் (7.1.11) |
| 293. | 28.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** கிருஷ்ணகிரியை அடுத்த காவேரிப்பட்டணத்தைச் சேர்ந்த நசீர்அகமது(33).. ஒரு விபத்தில் காயமடைந்த நசீர் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை. நசீர்முகமது காயச்சான்று வாங்க மருத்துவமனை பதிவறை எழுத்தர் நாகராஜை அணுகினார். அவர் ரூபாய் 250 லஞ்சம் கேட்டதாக நசீர்முகமது புகார். பணம் வாங்கிய நாகராஜ் கைது. | லஞ்சம் | செந்தில்ராஜா காலைக்கதிர் (8.1.11) |
| 294. | 28.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி கம்பை நல்லூர் அருகே உள்ள ஐடையம்பட்டியைச் சேர்ந்த தங்கராஜ் மகள் பிரேமலதா(19). பிளஸ்–2 படித்த பிரேமலதாவை அதே பகுதியைச் சேர்ந்த மூர்த்தி, வேடன், அழகரசன் கடத்தியதாக தங்கராஜ் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | செந்தில்ராஜா காலைக்கதிர் (9.1.11) |
| 295. | 28.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** காவேரிப்பட்டணம் அடுத்த சின்ன குட்டூரைச் சேர்ந்த சிவா(24) மனைவி மணிமேகலை(19). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சிவா மணிமேகலையின் உடலில் மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்து விட்டு தப்பியதாக சிகிச்சை பெற்றவரும் மணிமேகலை சிவா மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | செந்தில்ராஜா காலைக்கதிர் (10.1.11) |
| 296. | 28.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** அரூரை அடுத்த சிந்தல்பாடி ரயில் நிறுத்தம் எதிரே கேட்பாரற்ற நிலையில் 15 சிப்பங்களில் 325 கிலோ ரேசன் அரிசி கிடந்ததாக அரூர் வருவாய் கோட்டாட்சியர் சோதனையின் போது பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | செந்தில்ராஜா காலைக்கதிர் (12.1.11) |
| 297. | 28.1.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** போச்சம்பள்ளி அடுத்த வெப்பாளம்பட்டியைச் சேர்ந்த திம்மராயன் மனைவி | பெண்கள் மீதான வன்முறை | செந்தில்ராஜா காலைக்கதிர் (12.1.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கனகராணி(22). திருமணம் ஆகி 11/2 வருடங்கள் ஆன நிலையில் வீட்டின் பின்புறம் உள்ள கிணற்றில் மர்மமான முறையில் கனகராணி இறந்துகிடந்ததாக புகார். | | |
| 298. | 28.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் வார்டுகளுக்கு வழங்க வேண்டிய டிவிக்களை நகராட்சி பள்ளியில் அதிகாரிகள் வைத்திருப்பதால் வகுப்பறைகள் இல்லாமல் 135 மாணவிகள் மரத்தடியில் அமர்ந்து படிக்கும் அவலநிலை. | வகுப்பறை வன்முறை | செந்தில்ராஜா காலைக்கதிர் (13.1.11) |
| 299. | 28.1.2011 | **சேலம் மாவட்டம்:** மேட்டூர் மால்கோ நிறுவனத்திலிருந்து, 60 லட்சம் டன் நச்சுத்தன்மை வாய்ந்த கழிவுகளை, காவிரி ஆற்றுப்படுகையில் கொட்டியுள்ளனர். அதனால் காவிரி குடிநீர் விஷமாகும் அபாயம் உள்ளதால், அந்நிறுவனத்தின் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஊர் பொதுமக்கள் புகார். | சுற்றுச்சூழல் பாதிப்பு | செந்தில்ராஜா காலைக்கதிர் (20.1.11) |
| 300. | 28.1.2011 | **சென்னை மாவட்டம்:** செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உள்ள அகதிகள் மீது வழக்குகள் இல்லாத நிலையில் ஜாமீனில் வெளி வந்தவர்களை காவலர்கள் மீண்டும் கைது செய்து முகாமில் அடைப்பு. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 301. | 28.1.2011 | **மதுரை மாவட்டம்:** ராமநாதபுரம் தேவிப்பட்டினம் ஊராட்சிக்குட்பட்ட உலகம்மன் கோவில் பகுதியில் வசித்த சீனி மனைவி சித்ராவை அதே பகுதியைச் சேர்ந்த காளியம்மாள், பெரியசாமி, குப்பமுத்து, காளீஸ்வரன், சுல்தான் என்கிற உலகநாதன் தாக்கியதாக கைது. மதுரை சிறையில் அடைக்கப்பட்ட ரிமாண்ட கைதி சுல்தான் உலகநாதன்(35) கைதான 3 மணி நேரத்தில் காவல் நிலையத்தில் மரணம். ஆத்திரமடைந்த கிராம மக்கள் மற்றும் உறவினர்கள் காவல் | சிறைக்கைதி மரணம் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையத்தில் முற்றுகை போராட்டம். | | |
| 302. | 28.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** சின்னாளபட்டி அருகே ஆத்தூர் ஒன்றியத்தில் அனைவருக்கும் கல்வி திட்ட ஆசிரியராக பணிபுரியும் செந்தில்குமார்(33) மனைவி ரமாபிரபா. திருமணம் ஆகி 3 வருடம் ஆன நிலையில் கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த ரமாபிரபா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 303. | 28.1.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** சின்னமனூர் அருகே உள்ள அத்திப்பட்டி என்ற அழகாபுரம் ஊராட்சியில் தண்ணீர் திறந்துவிடுபவராக பணிபுரியும் சின்னராஜ்(48). தண்ணீர் தொட்டியின் அருகே அரசமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சின்னராஜ் பிணமாக இருந்தாக பொதுமக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 304. | 28.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** காரியாப்பட்டி அருகே கருப்பசாமி கோயில் அருகே பதுக்கி வைக்கப்பட்டிருந்த இருந்த 1300 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 305. | 28.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே உள்ள தொம்பக்குளத்தில் மேல்கூரை அல்லாத பாத்ரூமில் இளம்பெண் குளித்ததை அதே கிராமத்தைச் சேர்ந்த ஜெகதீசன்(42) எட்டி பார்த்ததாக புகார். ஜெகதீசன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 306. | 28.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை களக்காடு அருகே தேவநல்லூர் பச்சையாற்றில் மணல் அள்ள அரசு அனுமதித்துள்ளதை தடை செய்யக்கோரி பொதுமக்கள் முற்றுகைப் போராட்டம். | மணல் கொள்ளை | ஜனசக்தி |
| 307. | 28.1.2011 | **வேலூர் மாவட்டம்:** அணைக்கட்டு ஊராட்சிக்குட்பட்ட புதுமனை கீழ்கொத்தூர் அருந்ததியர் மற்றும் ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்த நூறு | தலித்துகள் மீதான வன்முறை | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குடும்பங்கள் வசிக்கின்றனர். இக்கிராமத்தில் உள்ளவர்களுக்கு மயான வசதி அமைத்துக் கொடுக்குமாறு கலெக்டரிம் அருந்ததியர் காலனியைச் சேர்ந்த மக்கள் மனு. | | |
| 308. | 28.1.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, வளசரவாக்கம், ஸ்ரீதேவி குப்பம், ராதா அவென்யூவைச் சேர்ந்த ராகுலன்(27) மனைவி டியானா(28) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். தனது கணவர் அவரது பெற்றோரால் சிறைவைக்கப்பட்டுள்ளதாகவும் கணவரை மீட்டுத் தரக்கோரி தனது மூன்று குழந்தைகளுடன் டியானா கமிஷனரிடம் மனு. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 309. | 28.1.2011 | **கோவை மாவட்டம்:** கோவை, பீளமேட்டில் வசிக்கும் பிளஸ்–2 மாணவியை அவரது குடும்பத்தினர் திருமணத்திற்கு சம்மதிக்குமாறு துன்புறுத்துவதாக போலீஸ் கமிஷனர் சைலேந்திரபாபுவிடம் மாணவி புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 310. | 28.1.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் 3 வது பேருந்து நிலையத்தைச் சேர்ந்த வெங்கடேசன்(45) தனது வீட்டில் நகை திருடு போனதாக புகார். இது தொடர்பாக காவலர்கள் சோழவந்தான் அருகே சின்ன இரும்பாடியைச் சேர்ந்த வெள்ளைச்சாமியை கைது செய்து காவல்நிலையத்தில் விசாரணை. காவல் நிலையத்தில் வெள்ளைச்சாமி பிளேடால் வயிறை அறுத்து தற்கொலை முயற்சி. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 311. | 29.1.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை தாழையூத்து அருகே உள்ள கட்டுடையார்புரத்தைச் சேர்ந்த கமலக்கண்ணன் மனைவி உஷா(26). கணவன் மனைவி இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். உஷா பாலு என்பவருடன் குடும்பம் நடத்தியதால் ஆத்திரமடைந்த உஷாவின் அண்ணன்கள் சீனி, | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கார்த்திக் இருவரும் பாலுவின் வீட்டில் இருந்த உஷாவை அரிவாளால் வெட்டி கொலை செய்தனர். | | |
| 312. | 29.1.2011 | **தேனி மாவட்டம்:** தேனி அருகே கூழையனூரில் இறந்தவர்களை அடக்கம் செய்வது தொடர்பாக இருதரப்பினரிடையே மோதல். இரவு 12 பேர் கொண்ட கும்பல் ராஜா வீட்டில் பெட்ரோல் குண்டுகளை வீசியதில் காயமடைந்த ராஜாவின் தாய் சின்னாயி(50) மருத்துவமனையில் அனுமதி. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 313. | 29.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** திருச்சுழி மணிக்கட்டியேந்தலை சேர்ந்த ராசு தனது நிலத்திற்கு பட்டா மாறுதல் வழங்க திருச்சுழி சொட்டமுறி கிராமத்தைச் சேர்ந்த வி.ஏ.ஓ., தனசேகரனை அணுகினார். அவர் பட்டா மாறுதல் வழங்க ரூ. 2,500 லஞ்சம் கேட்டதாக புகார். தனசேகரன் கைது. | லஞ்சம் | தினமலர் |
| 314. | 29.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை, மேலூர் அருகில் உள்ள தாமரைப்பட்டியில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த 2500 பேர் வசிக்கின்றனர். இறந்தவர்களை சுடுகாடு கொண்டு செல்ல கண்மாயில் கழுத்தளவு நீரில் இறங்கி செல்லும் அவல நிலையில் கிராமம் உள்ளதாக பொதுமக்கள் புகார். | சுடுகாட்டுக்கு பாதை இல்லாமல் கிராம மக்கள் தவிப்பு | தினமலர் |
| 315. | 29.1.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் உள்ள நயினார் பாளையம் செம்படா குறிச்சி. சோழம்பட்ட கிராமங்களில் மேல் சாதியைச் சேர்ந்த சிலர் போலியான சான்று பெற்று தேர்தலில் போட்டியிட்டு மன்ற தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனார். தலித்துகள் ஊராட்சி மன்ற தலைவர்களாக வருவதை தடுக்கும் நோக்கத்தில் போலியான சான்று | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்று தலித் மக்களின் உரிமைகளை ஆதிக்கச் சாதியினர் பறித்துள்ளதாக தலித் மக்கள் புகார் தெரிவித்தும் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் கண்டுகொள்ளவில்லை என தலித் மக்கள் புகார். | | |
| 316. | 29.1.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி ஏ.பாப்பாரப்பட்டியைச் சேர்ந்த முருகனின் மனைவி தனலெட்சுமி. தனலெட்சுமி தனது உறவினர் வினோத்குமாருடன் மோட்டார் சைக்கிளில் சென்றபோது காவலர்கள் வினோத்குமாரை தாக்கி தனலெட்சுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. காவலர்களிடம் இருந்து தப்பிய ஒடிய தனலெட்சுமி எதிரே வந்த வாகனம் மீது மோதி மரணம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 317. | 29.1.2011 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி அருகே வரதராஜபுரத்தில் சாலை வசதி ஏற்படுத்தகோரி பொதுமக்கள் சாலை மறியல். மறியலில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 318. | 30.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை திருவள்ளுவர் நகர் பாமா காலனியில் சகாயம் என்ற டீக்கடைக்குள் உணவு கடத்தல் பிரிவு காவலர்கள் நடத்திய சோதனையில் 50 கிலோ எடை கொண்ட ஒன்பது மூடை ரேசன் அரிசி, 50 கிலோ சீனி, 80 கிலோ உளுந்தம் பருப்பு, மானிய விலையில் விற்கப்படும் வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டர்கள் பறிமுதல். டீக்கடை உரிமையாளர் ரவிச்சந்திரன் கைது. | ரேசன் அரிசி கொள்ளை | தினமலர் |
| 319. | 30.1.2011 | **திருவாரூர் மாவட்டம்:** திருத்ததுறைப்பூண்டி தேளாச்சேரி கிராமத்தைச் சேர்ந்த குமரன்(38) மனைவி நிர்மலா மகன் செல்வகணபதி(16) 9ம் வகுப்பு படித்து வந்தார். கணவன் மனைவி குடும்பத் தகராறில் தட்டிக் கேட்ட மகன் செல்வகணபதி மீது | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆத்திரமடைந்த குமரன் கோடாரியால் வெட்டியதில் செல்வகணபதி மரணம். குமரன் கைது. | | |
| 320. | 30.1.2011 | **விருதுநகர் மாவட்டம்:** திருச்சுழி அருகே குறவன்குளத்தைச் சேர்ந்த நேரு குடும்பத்தினர் நிலைமான் பகுதியில் ஒரு செங்கல் சூளையில் தங்கி வேலை செய்தனர். தனியாக செங்கல் சூளையில் இருந்த நேருவின் மகள் முத்துலெட்சுமி(18) தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | மாலைமலர் |
| 321. | 30.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை புதுரெயில்வே காலனியைச் சேர்ந்த செந்தில்நாதன் மனைவி சித்ரா. திருமணமாகி 11/2 வருடங்கள் ஆன நிலையில் செந்தில்நாதன் மற்றும் அவரது குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக கர்ப்பிணியாக உள்ள சித்ரா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | மாலைமலர் |
| 322. | 30.1.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** வந்தவாசி அருகே பிணமாக கிடந்த பெண் விசாரணையில் ஆற்காட்டை சேர்ந்த சவுந்தரி(37) கணவர் மதியழகன் திண்டிவனத்தைச் சேர்ந்த கணவன் மனைவி இருவரும் என்ஜினீயர்கள். சவுந்தரி மறைமலை நகரில் பணிபுரிந்து வந்தார். அவரை மர்ம நபர்கள் கடத்திச் வந்து பாலியல் பலாத்காரம் செய்து கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | மாலைமலர் |
| 323. | 30.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை செக்கானூரணி அருகே கோவிலாங்குளத்தைச் சேர்ந்த செல்வக்குமார்(27). மனைவி தமிழ் இலக்கியா(20). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் கொலை மிரட்டல் விடுத்ததாக தமிழ் இலக்கியா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணை கொடுமை | தமிழ்முரசு |
| 324. | 31.1.2011 | **சென்னை மாவட்டம்:** துரைப்பாக்கம் கண்ணகி நகரில் வசிப்பவர் சந்துரு மனைவி | பெண்கள் மீதான வன்முறை & | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லெட்சுமி(30). சந்துருவின் குடிப்பழக்கத்தால் கணவன் மனைவி இருவருக்கும் தகராறு. மனமுடைந்த 7 மாத கர்ப்பிணி லெட்சுமி தீக்குளித்துத் தற்கொலை. | தற்கொலை | |
| 325. | 31.1.2011 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடி அருகே இரண்டு கார்கள் ஒன்றை ஒன்று விரட்டியது. முன்னால் வந்த காரில் இருந்த இளம் பெண்ணையும், வாலிபரையும் பின்னே காரில் வந்த நபர்கள் தங்களது காரில் கடத்திச் சென்றனர். காரில் ஏறமுயன்ற விஜயபாஸ்கர் என்பவரை காவலர்கள் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 326. | 31.1.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகேயுள்ள பெரிய ஊர்சேரியைச் சேர்ந்த சந்திரன்(25) மனைவி முத்துமாரி(23). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த முத்துமாரி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினமலர் |
| 327. | 31.1.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் அரவிந்த் நகரைச் சேர்ந்த ராமகிருஷ்ணன்(27) மனைவி கிருஷ்ணவேணி(23) இவர் அறந்தாங்கியில் ஆசிரியையாக பணிபுரிந்தார். திருமணமாகி 43 நாட்களே ஆன நிலையில் தனியாக வீட்டில் இருந்த கிருஷ்ணவேணி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 328. | 31.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை முல்லை நகரைச் சேர்ந்த சுரேஷ்கண்ணன் மனைவி முருகேஸ்வரி(26). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக முருகேஸ்வரி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 329. | 31.1.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கீரைத்துறையைச் சேர்ந்த ஜெயக்குமார் மகள் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **ஜெனிபர்மேரி(23). கரிமேடு பகுதியில் மில்லில் வேலை பார்த்த ஜெனிபர்மேரியை காணவில்லை என பெற்றோர் புகார்.** | | |